# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb


LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 278 | சனி, மார்ச் 16, 2024 | 14 பக்கங்கள்


# நான் ஏன் தப்பியோடினேன் இது கோத்தாவின் கதை

ஆர்த்திகன்




# தொல்பொருள் யுத்தத்தை எதிர்கொள்வது எவ்வாறு?



அகிலன்

# கோட்டா எழுதிய புத்தகம்





வீ.தனபாலசிங்கம் செவ்வி

# தேசிய நீக்கம் செய்ய முயலும் தமிழ் சினிமா

துரைராஜா ஜெயராஜா





info@ilakku.org



© 2024 இலக்கு இணையம்

## வெடுக்குநாறி மலையில் கைதானவர்களில் ஐந்து பேர் உண்ணாவிரதப் போராட்டம்



வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் புதன்கிழமை(13) உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், தமக்கு நீதி கோரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஐவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

அவர்களை கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் நேற்று வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தினர் என்று தெரிவித்தனர்.

இதனையடுத்து மேற்படி 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. வவுனியாசிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இவர்களை நாடாளுமன்ற

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ரஸ்யாவின் அணுஉலை மீது தாக்குதல்

உக்ரைனில் ரஸ்யாவின் கட்டுப்பாட்டுப் பகுதியான சப்ரோசியாவில் இருக்கும் ஐரோப்பாவின் மிகப்பெரும் அணுஉலை மீது உக்ரைன் படையினர் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் கடந்த வியாழக்கிழமை(14) தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குண்டுகள் அணுஉலைகளை குளிர்விக்க பயன்படுத்தும் இயந்திரங்களுக்கு வினியோகம் செய்யும் எரிபொருள் தாங்கி உள்ள பகுதியில் வீழ்ந்ததால் மிகப்பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த அணுஉலைக்கான மின்சாரவசதிகள் தடைப்பட்டால் அதனை ஈடுசெய்வதற்காக மின்பிறப்பாக்கிகளுக்குகான எரிபொருள் தாங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளன. அவை சேதமடைந்தால் மின்சாரவசதி பாதிக்கப்படும். அவ்வாறு பாதிக்கப்பட்டால் அணுஉலையில் மிகப்பெரும் அனர்த்தம் ஏற்படலாம்.



ஐரோப்பாவின் மிகப்பெரும் அணுஉலை தாக்கப்படும் சாத்தியங்கள் உள்ளதாக கடந்தவாரம் ஐ.நாவின் அணுசக்தி அமைப்பின் தலைவர் கருத்து தெரிவித்த பின்னர் உக்ரைன் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சமூகவலைத்தளத்தை தடை செய்த அமெரிக்கா

தனது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என தெரிவித்து அமெரிக்கா நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையினர் சீனாவின் ரிக்-ரொக் சமூகவலைத்தளைத்தை முற்றாக தடை செய்யும் தீர்மானத்திற்கு ஏகமனதாக வாக்களித்துள்ளனர்.




எனினும் இந்த தீர்மானத்தின் மீதான அமெரிக்க செனட் சபையின் வாக்கெடுப்பின் பின்னரே இறுதியான முடிவுகள் எடுக்கப்படும்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ள சீனா எல்லா சமூக வலைத்தளங்களையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு அமெரிக்கா முற்படுகின்றது என குற்றம்சாட்டியுள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலண்டன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளை சட்டவிரோதமானது

இலங்கைக்கு வெளியே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான எந்த அனுமதியும் இதுவரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் வழங்கப்படவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கே உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை



வருமாறு:-

“இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்கிளைகள்வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றன. அதேவேளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமை பெற்றவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் புலம்பெயர் நாடுகளில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அமெரிக்காவின் புலனாய்வுத்தளத்தில் குண்டு வெடிப்பு –16 பேர் காயம்

கடந்த புதன்கிழமை(13) அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள எப்.பி.ஐ என்ற புலனாய்வு அமைப்பின் பயிற்சித் தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் 16 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



புதிய படையினருக்கான

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஏமாற்றப்படும் விவசாயிகள்



நெற் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வருகிறார்கள் என கிண்ணியா விவசாய சம்மேளன ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார். கிண்ணியாவில் வியாழக்கிழமை(14) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துக்களை தெரிவித்த அவர் அரசானது 7 மாவட்டங்களில் இருந்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்வதற்காக தற்போது நிதியை ஒதுக்கி மனுக்களை கோரியிருக்கின்றார் கள்.

ஆனால் தற்போது எந்த விவசாயிகளிடமுமே நெல் இல்லை. அறுவடை ஆரம்பிக்கின்ற போது நெல் கொள்வனவு செய்வதற்கு பதிலாக அறுவடை செய்யப்பட்ட அனைத்து நெல்லும் கறுப்பு சந்தையில் அநியாய விலைக்கு தனியாருக்கு விற்று தீர்ந்த பிறகு கொள்வனவு செய்வதற்கு அரசு முன் வந்துள்ளது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ரஸ்யாவில் தேர்தல் ஆரம்பம்– சுயேட்சையாக போட்டியிடுகின்றார் பூட்டின்



ரஸ்யாவில் கடந்த வெள்ளிக்கிழமை(15) ஆரம்பமாகிய அரச தலைவருக்கான தேர்தல் 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் ஐந்தாவது தடவையாக தற்போதைய அதிபர் விளமிடீர் பூட்டின் சுயேட்சையாக போட்டியிடுகின்றார்.

முதல் தடவையாக ரஸ்யாவில் 3 தினங்கள் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த தேர்தலில் பூட்டினை எதிர்த்து பொதுவுடமைக் கட்சியின் தலைவர் நிக்கலே கரிரனோவ், புதிய மக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இலங்கையில் சீனாவின் படைத்தளம்? அவசரமாக வந்த அமெரிக்காவின் உளவு விமானம்

*இலங்கை உட்பட பல நாடுகளில் இராணுவ கட்டமைப்புகளை ஏற்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்து வருகின்றது என அமெரிக்க புலனாய்வு பிரிவினர் தமது சமீபத்தைய அறிக்கையில் தெரிவித்துள்ளதாக ஐஏஎன்எஸ் செய்தி வெளியிட்டுள்ளது.*

*ஜிபுட்டியில் உள்ள அதன் இராணுவதளத்தையும் கம்போடியாவில் உள்ள அதன் கடற்படை தளத்தையும் மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சீனா இதற்கு அப்பால் இலங்கை உட்பட பல நாடுகளில் தனது தளங்களை உருவாக்க முயல்கின்றது என அமெரிக்க புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர் என ஐஏன்என்எஸ் தெரிவித்துள்ளது.*



*சீனா 2035 ஆண்டளவில் முழுமையாக நவீனமயமாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு மற்றும் இராணுவ படையை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்துகின்றது. 2049ம் ஆண்டுக்குள் சீன இராணுவத்தை உலகதரம் வாய்ந்ததாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது என அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் மதிப்பிட்டுள்ளன.*

*இதேகாலப்பகுதியில் சீனாவின் கம்யுனிஸ்ட் கட்சி தனது இறையாண்மை பிரதேசம் என கருதும் பகுதிகளை பாதுகாப்பதற்கு சீன இராணுவத்தை பயன்படுத்தவும் பிராந்திய விவகாரங்களில் தனது முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தவும் தனது இராணுவத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள அமெரிக்க இராணுவம், சர்வதேச அளவில் தனது வலிமையை வெளிப்படுத்தவும் நீரிணை மோதலின் போது அமெரிக்காவின் தலையீட்டை தடுக்கவும் எதிர்க்கவும் தனது இராணுவத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.*

*இதனிடையே, அமெரிக்க உளவு விமானத்தை பயன்படுத்தி இரத்மலானை விமான நிலையத்தில் விசேட பயிற்சிகள் இந்தவாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் தலையீட்டுடன் இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.*



*அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான N7700 Bombardier விமானத்துடன் அதன் ஊழியர்களும் இரத்மலானை விமான நிலையத்திற்கு இந்தவாரம் வருகை தந்துள்ளனர். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், விமானப்படை தளபதி, கடற்படை தளபதி ஆகியோர் இவர்களை வரவேற்றுள்ளனர்.*

*தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும்*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

இலக்கு

## ஈழத்தமிழர் இறைமையைப் பேணப் பண்பாட்டு எழுச்சியும் தேசிய வாழ்வும் தாயகத்திலும் உலகிலும் உடன் கட்டமைக்கப்பட வேண்டும்

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் இந்துக்களின் முக்கிய நாளென்று சிறிலங்கா ஜனாதிபதியே வாழ்த்துத் தெரிவித்து ஏற்றுக்கொண்ட அதே மகாசிவராத்திரி நாளன்றே, இரவு வழிபாட்டுச் சுதந்திரம் பறிக்கப்பட்டுச் சிறிலங்காப் பொலிசார் அனைத்துலக சட்டங்களுக்கும் மனித உரிமைகள் சாசனத்திற்கும் எதிராக அடியார்களைச் சிறிலங்காவின் அடிமைகள் போல் நடாத்திய வரலாறு 08.03.2024இல் பதிவாகியது. கூடவே குடிதண்ணீர் தாங்கியைத் திறந்து விட்டு சிறிலங்காப்படையினர் தண்ணீரை ஆயுதமாகப் பயன்படுத்தி மனிதாயத்துக்கு எதிரான குற்றத்தையும் செய்தனர். தொடர்ந்து பாதிப்புற்ற ஐயரும் 7 அடியவர்களும் தொல்லியல் வனவிலங்கு பாதுகாப்புப் பகுதிகளுக்குள் சேதம் விளைவிக்கத் தீயையும் நீரையும் கொண்டு சென்றனரெனப் போலிக் கிரிமினல் குற்றம் பொலிசாரால் சுமத்தப்பட்டுக் கைதுசெய்யப்பட்டு கைவிலங்குகளை அகற்றாமலே அடிமைகள் போல் வைத்தியசாலையில் அடிகாயங்களுக்குச் சிகிச்சையளிப்பித்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு அடுத்த விசாரணைவரை விசாரணைச்சிறைக்கு கைவிலங்குகளுடனேயே அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர். விசாரணைச் சிறையில் தங்களுக்கு இழைக்கப்படும் மனித உரிமைகள் வன்முறைகளை எதிர்த்து அப்பாவிகளான தங்கள் விடுதலைக்காகப் பாதிக்கப்பட்டவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இந்த நிகழ்வு ஈழத்தமிழர்களின் மேலான பண்பாட்டு இனஅழிப்பு நோக்கில் சிறிலங்காப் பொலிசார் செயற்பட்டு வருவதற்கு மற்றொரு பதிவாகவுள்ளது.

இதனால் ஈழத்தமிழர்களைத் தங்கள் பண்பாட்டைப் பேணுவதற்காக பேரெழுச்சி கொண்டெழவும் தமிழ்த்தேசியம் வாழப்படும் ஒன்று என்பதை வெளிப்படுத்தவும் விடுக்கப்பட்ட காலத்தின் அழைப்பாகவும் உள்ளது. முன்னர் பொங்குதமிழ் மூலம் ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டுப் பேரெழுச்சியை உலகுக்கு உணர்த்திய பேராசிரியர் சிதம்பரநாதன் போன்ற வளவாளர்களின் இணைப்பில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு மீளுருவாக்கமும், தமிழ்த்தேசியத்தை வாழ்வாக்க வேண்டுமென்று அரசறிவியல் நிலையில் அளப்பரிய பங்களிப்புக்களைச் செய்து வரும் பேராசிரியர் சோதிலிங்கம் போன்ற வளவாளர்களின் இணைப்பில் எல்லாப் பல்கலைக்கழக அறிவுச்சமுகமும் திரள்நிலை மக்கள் சமுகமும் இணைந்த தமிழ்த்தேசிய எழுச்சி, சாதி மத பிரதேச அரசியல்கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் சமுக உள்வாங்கலுக்குள் கொண்டு வந்து மாறுபட்ட விழுமியங்களையும் மதித்து சமுக ஒருமைப்பாட்டின் மூலம் சமுகத்திற்குச் சக்தியளிக்கும் செயலாகத் தாயகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பண்பாட்டு எழுச்சியும் தமிழ்த் தேசியத்தில் வாழ்வதும் உலகெங்கும் புலம்பெயர் ஈழத்தமிழர்களால் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது இலக்கின் இவ்வாரத்தின் முதல் எண்ணமாக உள்ளது.

அரசற்ற தேசஇனமாக ஈழத்தமிழர்கள் 22.05. 1972 முதல் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளுக்காக நடாத்தும் 52 ஆண்டுகாலத் தொடர் போராட்டத்தில் சமகால புதிய உலக அரசியல் ஒழுங்கு முறைக்கு ஏற்ப பொதுவெளியில் சனநாயகப் போராட்டங்களில் பயணிப்பதற்கான புதிய வாயில்களைப் பண்பாட்டு மீளுருவாக்கமும் தமிழ்த்தேசியம் வாழ்வாகுவதும் ஏற்படுத்தும் என்பது இலக்கின் உறுதியான எண்ணம். பண்பாட்டு மீளுருவாக்கம் மலையகத் தமிழர்கள் தமிழ்பேசும் முஸ்லீம் மக்கள் தங்கள் தனித்துவ அடையளாங்களைப் பேணிய நிலையில் ஈழத்தமிழர்களுடன் பண்பாட்டு அரசியலில் ஒரு சமுகமாகத் தங்களை முன்னிறுத்திச் சமகாலத்தின் பொதுத்தேவைகளைப் பெறுவதற்கான மக்கள் பலத்தையும் தோற்றுவிக்கும்.

அமெரிக்க இந்திய பயணங்களின் பின்னர் ஆசிய நாடுகளின் தூதுவர்கள் அணியொன்று தேசிய மக்கள் சத்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்காவைச் சந்தித்து உரையாடியதன் தொடர்ச்சியாக கனேடியத் தூதுவர் எரிக்வோல்ஸ் கனேடியத் தூதரக அரசியல் செயலாளர் பற்றிக் பிக்கரிங் ஆகியோர் மக்கள் விடுதலை முன்னனியின் தலைமை அலுவலகத்துக்குத் தாங்கள் சென்று அநுர குமார திசநாயக்காவுடனும் விஜித ஹெரத் உடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு எதிர்வரும் 23ம் திகதி கனடாவுக்கு இலங்கையின் இளையவர்களைச் சந்திக்கச் செல்லும் அநுரகுமாரதிசநாயக்காவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இவைகள் எல்லாம் இந்திய அமெரிக்க பின்னணியில் ஈழத்தமிழர் தேசஇனத்தவர் என்ற வரலாற்றுப் பரிணாம நிலை ஈழத்தமிழர் சிறிலங்காவின் ஒரு சமுகத்தவர் என்ற அரசியல் நிலையாக வரைவுபடுத்தப்பட்டு ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது ஈழத்தமிழர் சமுகப் பிரச்சினையென்று தீர்வினை அடைவதற்குச் சிங்களச் சமுகத்தை அந்த தீர்வையும் அவை எதிர்க்காது ஏற்க வைப்பதற்கான முயற்சிகளாக உள்ளன. இந்நேரத்தில் ஈழத்தமிழர் பண்பாட்டு எழுச்சியும் தேசிய எழுச்சியும் சனநாயக வழிகளில் வெளிப்படுத்தப்பட்டு ஈழத்தமிழர்களின் அடையாளம் அவர்கள் 'தேச இனத்தவரே' என்பதை இலங்கையிலும் உலகிலும் நிலைபெற வைக்க வேண்டிய நேரமிது.

மேலும் சிறிலங்கா இன்னும் இரண்டு வாரத்துள் தனது கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கைகளைச் செய்து அனைத்துலக நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட கடனுதவிக்குத் தன்னைத் தகுதியாக்கக் கடுமையாக முயற்சிக்கிறது. ஆனால் அனைத்துலக நாணயநிதிய இலங்கைக்கான செயற்திட்டத் தலைவர் பீற்றர் ப்ருவர் தலைமையில் மதிப்பீடுகள் நடைபெற்ற பின்னர் 33 வீதமான இலக்குகள் நிறைவேற்றப்படவில்லை இன்னும் 36 இலக்குகளுக்கு மதிப்பீட்டுக்கான தரவுகள் இல்லையென அறிக்கை வெளிவந்துள்ளது. இந்நிலையில் சிறிலங்கா பெற்ற இருதரப்பு கடன்களை மறுசீரமைக்க நாடுகளுடனான தனது நட்பைப் பயன்படுத்தினாலும் 11 தனியார் கடன் வழங்குநர்கள் உட்பட தனியார் கடன்வழங்குநர்களிடம் இருந்து பெற்ற 17 பில்லியன் டொலர் பிணைமுறிக் கடன்களுக்கு கடன் மறுசீரமைப்புச் செய்வதிலே சிக்கல் உள்ளது. ஆய்வாளர் றொபேர்ட் அன்ரனி அவர்களின் மார்ச் 13ம் திகதிய வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த "தனியார் கடன் வழங்குநர்களின் யோசனையை இலங்கை ஏற்குமா?" என்ற ஆய்வுக்கட்டுரையில் "கடந்த வருடம் (2023) நவம்பரிலேயே அனைத்துலகத் தனியார் கடன் வழங்குநர்கள் சிறிலங்காவின் அனைத்துப் பிணைமுறிகளையும் மீளப்பெற்று 2027 நவம்பரில் இருந்து 2036 இல் முதிர்ச்சி அடையக்கூடிய புதிய 10 பிணைமுறிகளை 2026 டிசம்பர் மாதத்தில் தாம் வழங்கவும், 20வீதக் கடனை மன்னிக்கவும், வட்டிவீதத்தைக் குறைக்கவும் யோசனை வழங்கியதை விளக்கியுள்ளார். இந்த வட்டி வீதக் குறைப்புப் பொறிமுறை சிறிலங்காவின் பொருளாதாரம் அடுத்த சில வருடங்களில் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியில் 93 பில்லியன் டொலர் முதல் 96.4 பில்லியன் டொலர் வரை பெற்றால் கடன் வட்டிவீதத்தை 2.5 வீதமும், 93 பில்லியன் டொலர்களுக்குக் குறைவாகப் பெற்றால் 4.5 வீதமும், 89.5 பில்லியன் டொலர்களுக்குக் குறைந்தால் 6 வீதமாகவும் அமையும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சிறிலங்கா இணங்கினால் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்து மொத்தத் தேசிய உற்பத்தியைப் பெருக்கி நாட்டைக் கடனிலிருந்து மீட்டல் என்ற செயற்திட்டம் செயலிழக்க நேரும். வட்டிக்கு உழைத்துக் கொடுப்பவர்களாக நாட்டின் மக்களின் உழைப்பு மாற்றம் பெறும். கடன்தொகை தீர்க்கப்பட முடியாதவொன்றாக என்றும் தொடரும். இதனால் சிறிலங்கா இதற்கான தனது இணக்கத்தை வழங்கினாலும் ஆபத்து வழங்காது விட்டாலும் ஆபத்து என்ற நிலையில் தவிக்கிறது. இந்நேரத்தில் புலத்தில் வாழும் ஈழத்தமிழர்கள் இந்த தனியார் கடன் வழங்குநர்களை அணுகி ஈழத்தமிழர்களை இனஅழிப்பு செய்யும் சிறிலங்காவின் மக்கள் மேலான போருக்கு ஆயுதங்கள் கொள்வளவு செய்யவும் படைகளைப் பேணவுமே சிறிலங்கா அதிகளவு பணத்தைக் கடனாகப் பெற்றது-பெறுகிறது, என்ற உண்மையை விளக்கி ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையிலான தீர்வை சிறிலங்கா மேற்கொள்ள வேண்டும் என்பதை கடன் மறுசீரமைப்புக்கான இலக்காக வைக்க வலியுறுத்த வேண்டும் என்பதும் இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**

# தொல்பொருள் யுத்தத்தை எதிர்கொள்வது எவ்வாறு?

அகிலன்

வெடுக்குநாறிமலை விவகாரம் தமிழ் அரசியலில் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. உண்மையில் இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. இலங்கை முழுவதையும் சிறுபான்மையினர் என்று எவரும் இல்லாத சிங்கள-பௌத்த நாடாக மாற்றுவதற்கா நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கம்தான். இதனைத் தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் எவ்வாறு வெற்றிகொள்ளப்போகின்றார்கள் என்பதுதான் எம்மத்தியில் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வி!

பிரதேசங்களை ஆக்கிரமிப்பதில் அண்மைக் காலத்தில் அதிகளவு கவனத்தைச் செலுத்தி வருகின்றது. தொல்லியல் திணைக்களத்தை நாட்டின் அதியுச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாலோ, நீதிக் கட்டமைப்பான நீதிமன்றங்களாலோ கூட கட்டுப்படுத்த முடிவதில்லை என்பதை கடந்த சில வருடங்களாக நாம் காண முடிகின்றது.

தொல்லியல் திணைக்களம் நினைத்தால், தமிழர் தாயகப் பகுதிகளில் எதை வேண்டுமானாலும் ஆக்கிரமித்துக் கொண்டு, தொல்லியல்



தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வந்த வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலை அங்கிருந்து அகற்றிவிட்டு, அதனை பௌத்த விகாரையாக்குவதற்கான திட்டங்களுடன் பௌத்த பிக்குகள் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் செயற்பட்டுவருகின்றார்கள். இந்தப் பின்னணியிலேயே, சிவராத்திரி தினத்தன்று மீண்டும் அங்கு பிரச்சினை வெடித்துள்ளது.

தமிழ் தரப்பினரும் இந்தப் பிரதேசத்தை விட்டுக்கொடுப்பதில்லை என்பதில் உறுதியாக இருப்பதால், வெடுக்குநாறிமலை ஒரு பலப் பரீட்சைக்குரிய இடமாக இப்போது மாறியிருக்கின்றது.

தமிழ் மக்களின் தொன்ம வழிபாட்டிடங்களில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் முக்கியமானவர். பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு, காட்டின் இயற்கைச் சூழலுக்கு சேதம் விளைவிக்காது, அப்பகுதி மக்களால் காலங்காலமாக வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆனால், கடந்த சில வருடங்களாக, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின்கட்டுப்பாட்டிலேயேஇருந்துவருகின்றது. இந்த நிலையிலேயே, ஆலய விக்கிரகங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் அதற்குரிய விதிமுறைகளை மீறிச் செயற்பட்டுவருகின்றது என்பதற்கான மற்றொரு உதாரணமாக வெடுக்குநாறிமலை விவகாரம் உள்ளது.

அரசாங்கத்தின் முழுமையான ஆதரவுடன் பௌத்த அடிப்படைவாதத்தின் அடாவடிகளை செயற்படுத்தும் நிறுவனமான தொல்லியல் திணைக்களம், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலப்பகுதி என்று அறிவித்துக் கொண்டு, பௌத்த விகாரைகளை அமைக்க முடியும் என்பதுதான் இப்போதைய நிலை. ஆனால், இது தொல்லியல் திணைக்களத்தின் விதி முறைகளுக்கு முற்றிலும் முரணானது. தொல்லியல் திணைக்களம் என்பது இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் செயற்பட வேண்டிய ஒன்று.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது என ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டால், அந்தப் பகுதியைப் பேணிப் பாதுகாப்பதும், எதிர்கால ஆய்வுகளுக்கு உதவுவதும்தான்



தொல்பொருள் திணைக்களத்துக்குள்ள பணி. அங்கு ஏற்கனவே இருக்கின்ற கட்டுமானங்கள், சின்னங்களை அகற்றுவதோ அல்லது சேதப்படுத்துதோ அதன் பணி அல்ல. அதேபோல, புதிய கட்டுமானங்களையும் அமைக்க முடியாது. ஆனால், தொல்பொருள் திணைக்களம் அதற்குரிய நடைமுறை விதிகளுக்கும், நீதிமன்றத் தீர்ப்புக்கும் முரணாக இவற்றைத்தான் செய்கின்றது.

வெடுக்குநாறிமலையில் மட்டுமன்றி குருந்தூர்மலையிலும் தொல்லியல் திணைக்களம் இதனைத்தான் செய்தது. நீதிமன்றத்தின் கட்டளை கூட அங்கு செல்லுபடியாகவில்லை. முல்லைத்தீவில் உள்ள குருந்தூர்மலையிலும், படையினரும் ஏனைய அரச கட்டமைப்புக்களும் இந்த பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சிங்களவர்கள் இந்தச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியைப் பெருமளவுக்கு வழங்கிவருகின்றார்கள்.

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழ்மக்களுடைய தாயகப் பகுதிகளை சிங்கள மயமாக்குவதற்கான உபாயங்களில் ஒன்றாக "தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி" என்ற பிரகடனத்தை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. இதன்மூலம் தமிழ் மக்களின் தொன்மையான பல பகுதிகள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றை சிங்கள – பௌத்த மயமாக்கும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் இவ்விதம் தொல்பொருள்முக்கியத்துவம்வாய்ந்தபகுதிகளாக ஏற்கனவே அடையாளங்காணப்பட்டுள்ளன. சில இடங்கள் மட்டும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை பௌத்த மயமாக்கும் செயற்பாடுகள் அரச கட்டமைப்புக்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கு ஆதரவாகச் செயற்படாவிட்டால், குறிப்பிட்ட அரச கட்டமைப்புக்கள் துரோகிகளாக முத்திரை குத்தப்படலாம். அதனால், பௌத்த சிங்களத் தரப்புக்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் இதற்கு ஆதரவாகவே இயங்குகளின்றன.



தொல்லியல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாடுகளின் பின்னணியில் சிங்கள புத்திஜீவிகள் பலரும் செயற்படுகின்றார்கள். நீண்ட கால அடிப்படையிலான நிகழ்ச்சி நிரலில் ஒவ்வொரு அங்கம்தான் வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை போன்றவை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதைகளுடன் சிங்கள தேசம் தயாராக இருக்கின்றது.

நாடு முழுவதும் புத்தர் சிலைகளை வைத்து நிரப்புவதன் மூலம், இந்த நாட்டின் வரலாற்றை போலியாக எழுதி, பௌத்த சிங்கள நாடாக எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கும் மகாவம்ச மனநிலையின் விளைவுகள்தான் நாட்டை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கோட்டா எழுதிய புத்தகம்





முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள "என்னை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான சதி" என்ற புத்தகம் கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் அவர் தெரி வித்திருக்கும் பல விடயங்கள் கடும் விமர்சனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் இந்த நூலின் உள்ளடக்கம், அதன் நோக்கம், அதன் தாக்கங்கள் என்பன தொடர்பில் மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம், அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தெரிவித்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.

## வீ.தனபாலசிங்கம் செவ்வி

**அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் "என்னை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான சதி" என்ற தலைப்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியிருக்கும் நூலின் உள்ளடக்கம் என்ன?**

ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமக்கு எதிரான அனைத்தையும் ஒரு "சதி" எனக் கூறுவதை ஒரு சிறப்பான கலையாக வளர்த்துள்ளார்கள். 2005 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த காலத்திலிருந்து, போர் செய்தது, பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்தது, இடையில் அதிகாரத்தை இழந்தது போன்ற கால கட்டங்களில் எல்லாம் அவர்களுக்கு எதிரான செயற்பாடுகளை-அது சிங்களவர்களால் முன்னெடுக்கப்பட்டதாக இருந்தாலென்ன தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டதாக இருந்தாலென்ன அவற்றை சதி என்றே கூறினார்கள். அதாவது, அது வெளிநாட்டு சதி, வெளிநாட்டவர்களின் உள்ளூர் கையாட்களின் சதி என்றே அவர்கள் கூறி வந்தார்கள்.

அந்தப் பின்னணியில்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், "என்னை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான சதி" என்ற தலைப்பில் இந்த நூலை வெளியிட்டிருக்கின்றார். இந்த நூல் பெரியளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது என்று சொல்ல முடியாது. ஆனால், அரசியல் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், அறிவுஜீவிகள் மத்தியில் அதன் மீதான ஆர்வம் அதிகமாக இருந்தது. முதல் தொகுதி நூல்கள் விற்றுத் தீர்ந்துவிட்டதாக செய்திகள் வெளிவந்திருந்தன. அது சகஜமானதுதான். வெளிநாட்டு இராஜதந்திரிகள் போன்றவர்களும் இதில் அக்கறை காட்டுகின்றார்கள் என்பது உண்மை.

ராஜபக்ஷக்கள் சதி என்று சொன்ன உடனடியாகவே இதில் என்ன இருக்கப்போகின்றது என்ற கேள்வி எழுகின்றது. ஏற்கனவே அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட விமல் வீரவன்ச கூட, "ஒன்பது: ஒளிந்திக்கும் இரகசியம்" என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். கோட்டாபயவின் நூலில் உள்ள விடயங்களைவிட அதிகளவு விடயங்கள் விமல் வீரவன்சவின் நூலில் இருப்பதாக பலர் எழுதுகின்றார்கள். ஏனென்றால், கோட்டாபய சதி என்று குறிப்பிடுகின்றார். ஆனால், எந்த நாடு என்று குறிப்பிடவில்லை. அவருக்கு அமெரிக்காவையோ, இந்தியாவையோ எதிர்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. ஆனால், சதி என்று கூறும் போது அவர் வெளிநாட்டைத்தான் முக்கியமாகக் குறிப்பிடுகின்றார். "சர்வதேச சதி" என்று சொல்கிறார். அதனைவிட, "இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கான சர்வதேச சதி" என்ற சொல்லையும் அவர் பாவிக்கின்றார். ஆனால், எந்த நாட்டையும் அவர் குறிப்பிடவில்லை. ஆனால், இவர்கள் சதி எனக் குறிப்பிடும் போது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அது ஆர்வத்தை ஏற்படுத்தும் என நான் நினைக்கவில்லை.

இதனைவிட, வேறு பல விடயங்களையும் இந்த நூலில் அவர் குறிப்பிடுகின்றார். முக்கியமாக தனது பலவீனங்களை பல இடங்களில் அவர் ஒப்புக்கொள்கின்றார். ஒரு இடத்தில் அவர் கூறுகின்றார், தான் பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது பாதுகாப்புப் பெட்டகங்களை பாதுகாப்பு அதிகாரிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போல, ஜனாதிபதியாக வந்த பின்னர் தன்னால் அப்படி வைத்திருக்க முடியவில்லை. தனக்குக் கீழ் பணிபுரிந்த பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ணவோ அல்லது இராணுவத் தளபதியாக இருந்த தபேந்திர சில்வாவோ தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என்பதை அவர் பதிவு செய்கின்றார். அவர்களுக்கிடையில் கூட, ஒருங்கிணைந்த செயற்பாடுகள் இருக்கவில்லை.

அரசியலைப் பொறுத்தவரையில் கோட்டாபய ஒரு கத்துக்குட்டி. ஒரு பிரதேச சபையில் கூட உறுப்பினராக இருக்காமல், ஜனாதிபதியாக நேரடியாக வந்தவர். முன்னர் பாதுகாப்புச் செயலாளராக இருந்ததை மட்டும் வைத்துக்கொண்டு ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர். ஜனாதிபதியாக இருந்தாலும், கட்சித் தலைமைப் பதவி தன்னிடம் இல்லாததால் அரசியல் விவகாரங்களைக் கையாள்வதில், வேட்பாளர்களை நியமிப்பதில் மற்றும் அது போன்ற பல விடயங்களில் தன்னால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது என்பதை ஒத்துக்கொள்கின்றார்.

அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ உட்பட ஜனாதிபதியாக இருந்த அனைவருமே, தமது பதவிக் காலத்தில் கட்சித் தலைவர்களாக இருந்தவர்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது கட்சியின் யாப்பில் கூட, அதற்கான பிரிவு ஒன்றை உள்ளடக்கியிருந்தார். அதாவது, ஐ.தே.க.விலிருந்து ஜனாதிபதியாக ஒருவர் தெரிவாகியிருந்தால், கட்சியின் தவைராகவும் அவரே இருப்பார் என்பது கட்சி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. சந்திரிகா ஜனாதிபதியாக வந்தபோது, கட்சி யாப்பில் அவ்வாறிருக்கவில்லை என்ற போதிலும், சந்திரிகாதான் கட்சியின் தலைவராகவும் இருந்தார். ஆனால், பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் அதற்கேற்றவாறான திருத்தம் செய்யப்பட்டது.

இவ்வாறான விடயங்களைக் கூட தெரியாத ஒருவராகத்தான் கோட்டாபய ஜனாதிபதியாக வந்தார். தன்னுடைய பலவீனங்களை இதில் வெளிப்படுத்துகின்றார்.

முற்றுமுழுதாக தமது தவறான ஆட்சிக்கும் ஊழலுக்கும் எதிராக கிளர்ந்தெழுந்த இந்த அரகலய போராட்டத்தை ஒரு இனவாதப் போராட்டமாகக் காட்டிக்கொள்வதற்கு அவர் முற்பட்டிருக்கின்றார். தனக்கு எதிராக கிளர்ந்தெழுந்த தமழ், முஸ்லிம் மக்கள் இந்தப் போராட்டத்தில் முக்கியமாக பங்கேற்றிருந்தனர் என அவர் கூறுகின்றார். தன்னுடைய தேர்தல் வெற்றியைக்கூட, சிங்கள பௌத்த நலன்களுக்கும் சிங்களவர், பௌத்தர்கள் அல்லாதவர்களின் நலன்களுக்கும் இடையிலான ஒரு போராட்டத்தின் விளைவாகத்தான் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதாக, அவர் குறிப்பிடுகின்றார்.

வெற்றிபெற்ற பின்னர் அவர் சொல்லியிருக்கின்றார், தன்னை சிங்கள மக்கள்தான் தெரிவு செய்தார்கள் என்று. இப்போது மீண்டும் சிங்கள மக்களை அணிதிரட்டி - மீண்டும் தமது குடும்பத்தினரை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியாகத்தான் இந்த நூலைப் பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன், அமெரிக்காவிலிருந்து பசிஸ் ராஜபக்ஷ தேர்தல்களை நோக்கி கட்சியை வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டு வந்திருக்கும் நேரத்தில் இந்த நூலை கோட்டாபய வெளியிட்டிருப்பதை ஒரு தற்செயல் நிகழ்வாகக் கொள்ள முடியாது. ஆனால், 2019 க்கு முன்னதாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்டுவதற்கான விசமத்தனமான பிரசாரங்களை முன்னெடுத்து மீண்டும் அதிகாரத்துக்கு வருவதென்பது கேள்விக்குறி. சிங்கள இனவாத சக்திகள் ராஜபக்ஷக்களிடம்தான் தஞ்சமடைந்திருந்தவர்கள், 2022 இல் ஏற்பட்ட தோல்வியை ஜீரணிக்க முடியாதவர்களாக இருந்தவர்கள் இப்போது ராஜபக்ஷக்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைவாக இருப்பதால், அவர்களை நம்பி அரசியல் நடத்த தயங்குகின்றார்கள்.

சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் ராஜபக்ஷக்களுக்கு புறம்பாக தனியான ஒரு அணியாக இருந்து அரசியலைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஆனால்,

தொடர்ச்சி 12ஆம் பக்கம்




# நான் ஏன் தப்பியோடினேன்

# இது கோத்தாவின் கதை

**ஆர்தீகன்**

இலங்கையை மையம் கொண்டுள்ள பூகோள அரசியல் போட்டிகளில் தன்னை சுற்றி பின்னப்பட்ட சதி வலைகள் என்ன? தன்னை காப்பாற்ற முயன்றவர்கள் யார்? தனக்கு எதிராக செயற்பட்டவர்கள் யார் என்பது தொடர்பான விபரங்களை இந்த வாரம் ஒரு புத்தகமாக வெளியிட்டுள்ளார் இலங்கையின் முன்னாள் அரச தலைவர் கோத்தபாயா ரஜபக்சா.




163 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகம் வெளிவந்த சில நாட்களில் சிங்கள மற்றும் ஆங்கில பதிப்புக்கள் அனைத்தும் விற்று தீர்ந்துவிட்டன. நுகேகொடவில் உள்ள கடை ஒன்றில் தனது சித்தப்பாவின் புத்தகத்தை தேடி சென்றிருந்தார் இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சாவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நமால் ரஜபக்சா.

தமிழில் வெளியிடவும் கோத்தா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த நூலில் அவர் கூறியது என்ன?

நான் 2019 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று பதவியேற்ற இரண்டு வாரங்களில் மேற்குலக கூட்டணி நாடுகளில் ஒன்றான சுவிற்சலாந்து எனக்கு எதிரான முதலாவது காயை நகர்த்தியிருந்தது.

இனந்தெரியாதவர்கள் சுவிஸ் தூதரகத்தில் பணிபுரியும் சிங்கள பெண் ஒருவரை கடந்த முற்பட்டதாக அனைத்துலக ஊடகங்கள் செய்திகளை பரபரப்பாக வெளியிட்டிருந்தன. சிறப்பு விமானத்தின் மூலம் அவரை நாட்டில் இருந்து வெளியேற்ற சுவிஸ் தூதரகம் முற்பட்டிருந்தது. ஆனால் நாம் மேற்கொண்ட விசாரணைகளில் அது பொய் என தெரியவந்ததுடன், கடந்த வருடம் அந்த பெண்ணுக்கு 2 மில்லியன் ரூபாய்கள் அபராதமும், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

எனது ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக காட்டவே இந்த நாடகம் அரங்கேறியது. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றங்களை மேற்கொள்ளும் அமைப்பல்ல என்ற தீர்ப்பை சுவிஸ் நீதிமன்றம் வழங்கியதுடன், 1999 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரையில் நிதி சேகரித்தது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 12 தமிழர்களையும் அது விடுதலைசெய்திருந்தது.



அதன் பின்னர் நான் பதவியேற்ற 6 வாரங்களில் அதாவது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ராஜபக்சாக்களின் குற்றங்களுக்கான ஆதாரங்களை நான் இல்லாது செய்வதுடன், புதிய குற்றங்களையும் செய்யப்போவதாக வொசிங்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை வெளியிட்டிருந்தது.

2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சகம் இராணுவத்தளபதி ஜெனரல் சவீந்திர சில்வா மீது பயணத்தடையை கொண்டுவந்திருந்தது.

சில இலங்கை அதிகாரிகள் ரஸ்யாவின் போக்குவரத்து விமானத்தை தடுத்துவைத்து எமக்கும் ரஸ்யாவுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்த முற்பட்டிருந்தனர். அதேசயம், கோவிட்-19 பெரும் தொற்றில் ஆசிரியர்களை போராடுமாறு தூண்டி கல்விச் சேவைகளை சீர்குலைக்கவும் முற்பட்டனர்.

2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டுவரை இருந்த ரணில்-மைத்திரி அரசின் தவறான கொள்கைகளால் வரி அறவிடுவதில் கொண்டுவந்த மாற்றம் மற்றும் சேதனப் பசளைகளை பயன்படுத்துதல் போன்ற காரணிகளால் தான் பொருளாதாரம் சரிந்தது.

மேற்குலக நாடுகளும், அவர்களின் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மக்களை போராட்டத்திற்கு தூண்டினர். காலிமுகத்திடல், அரச செயலகம், மற்றும் தலைநகர் கொழும்பில் போராடியவர்களுக்கு உணவு, குளிர்பானங்கள், நடமாடும் கழிப்பறைகள், கூடாரங்கள், தொலை தொடர்பு வசதிகள் என்பன தாராளமாக வந்து சேர்ந்தன. அதனை உள்ளூர் அமைப்புக்கள் வெளிநாடுகளின் உதவிகளுடன் நன்றாக ஒழுங்கமைத்தனர்.



2022 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் அரச செயலகம் அரச தலைவர் மாளிகை என்பன தாக்கப்படலாம் என படையினர் எச்சரித்தனர். அதேசமயம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இரு தூதரக அதிகாரிகள் என்னை தொடர்புகொண்டு போராட்டக்காரர்களின் சுதந்திரத்தில் தலையிட வேண்டாம் என எச்சரித்திருந்தனர். காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் இருப்பதையே அவர்கள் விரும்பினர்.




ஏப்ரல் 19 ஆம் நாள் ரம்புக்கணவில் எரிபொருள் தாங்கி மீது தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். உடனடியாக என்னை தொடர்புகொண்ட அமெரிக்கத் தூதுவது ஜூலி சாங் அது தொடர்பில் முழுமையான விசாரணை தேவை என வலியுறுத்தினார். இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பில் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தார்.

ஆனால் அதேசயம் இணையவளியிலான வன்முறையிலும், நேரிடையான வன்முறையிலும் ஈடபட்ட போராட்டக்குழுவினர் பல சேதங்களை விளைவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 70 இற்கு மேற்பட்டவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டார், ரணிலின் வீடும் எரிக்கப்பட்டது. இது ஒரு வேறுபட்ட பயங்கரவாதம், பழைய பயங்கரவாதத்தைவிட இது வலிமைவாய்ந்தது. ஜே.வி.பி மற்றும் பொதுவுடமை முன்னனிக் கட்சி என்பனவே இந்த போராட்டத்தில் முக்கிய பங்குவகித்தன. போரட்டத்தை தணிப்பது என்றால் எதிர்த்தரப்பில் இருந்து ஒரு பிரதமரை நியமிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அந்த பதவியை ஏற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவிடம் கேட்டபோது அவர் தனக்கு நாடாளுமன்ற பெரும்பான்மை வேண்டும் என தெரிவித்து மறுத்துவிட்டார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# குடி நீருக்காய் ஏங்கும் சீதனவெளி மக்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராமமே சீதனவெளி கிராமம். இக் கிராமத்தில் மக்கள் பல்வேறு கஷ்டங்களுடன் வாழ்ந்து வந்தாலும் முக்கியமான மனித தேவைகளுள் ஒன்றாக குடி நீரும் காணப்படுகிறது இது முக்கியமாக இருந்தாலும் குடி நீரின்றி வாழ்ந்து வருவது பெரும் கவலைக்குரிய விடயமாக உள்ளது. இப் பகுதி மக்கள் 2012ம் ஆண்டில் யுத்த இடப் பெயர்வு காரணமாக மீள் குடியேற்றப்பட்ட நிலையில் தற்போது வரை குடிப்பதற்கு சுத்தமான குடி நீரின்றி தவிக்கின்றனர்.




இக் கிராமத்தில் சுமார் 120 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். மனித தேவைகளுள் குடி நீரின்றி வாழ முடியாத நிலை உள்ளது. இம் மக்கள் குடி நீருக்காக அயல் கிராமமான சந்தோச புரத்துக்கு சென்று பாரிய சிரமங்களுக்கு மத்தியில் தான் நீரை பெறுகின்றனர். சுத்தமான குடி நீர் தேவை தொடர்பில் பல காலமாக உரிய தரப்புகளுக்கு தெரிவித்தும் அசமந்த போக்கில் அவர்கள் செயற்பட்டதனால் இன்னும் நீர் கிடைக்காமை வேதனையளிப்பதாக அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அப் பகுதி மக்கள் சுத்தமான குடி நீர் தேவையை வேண்டி கவனயீர்ப் பொன்றை மேற்கொண்டனர்.

தமது கிராமத்திற்கான சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருமாறு வலியுறுத்தி, மூதூர் - சீதனவெளி கிராம மக்கள் திங்கட்கிழமை (11.03.2024) அன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் புளியடி சந்தியிலிருந்து பிரதான வீதியூடாக நடைபவனியாக மூதூர் பிரதேச சபைக்குள் நுழைந்து அங்கு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், மூதூர் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் மகஜரும் கையளித்துள்ளனர் .

அதன் பின் மூதூர் பிரதேச சபையிலிருந்து பிரதேச செயலகம் வரை நடைபவனியாகச் பிரதேச செயலக வளாகத்தினுள் நுழைந்து அங்கு தமது கோரிக்கைகளை முன்வைத்து, கோசங்களை எழுப்பியிருந்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு சிலர் மூதூர் பிரதேச செயலாளரை சந்தித்து பேசியதோடு மகஜரும் கையளித்துள்ளனர்.

இது விடயத்தில் உரிய தரப்பினரிடம் பேசி நடவடிக்கை மேற்கொள்வதாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் வாக்குறுதி அளித்ததையடுத்து அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். இப்படியாக போராட்டத்தை கூட முன்னெடுத்திருந்த மக்கள் அன்றாடம் இவர்களின் தொழிலாக காட்டில் தேன் எடுத்தல்,விறகு வெட்டுதல்,சிறு மீன் பிடி போன்ற தொழில்களை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களாகிய இவர்கள் ஒரு தேவையை நிறைவேற்ற மூதூர் பிரதேசத்துக்கு செல்வதாயின் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதுடன் குளிப்பதற்கும் ஆடைகளை கழுவுவதற்கும் இன்னும் இதர



தேவைகளுக்கான நீரை மிக தூரத்தில் உள்ள குளத்துக்கு செல்ல வேண்டியுள்ளது .சுத்தமான நீரின்மையால் சில வேலைகளில் இங்கிருக்கும் நீரை அருந்துவதால் சிறு பிள்ளைகளுக்கு வாந்திபேதி உட்பட ஏனைய நோய்களும் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளது.

மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது உரியவர்களின் கடமையல்லவா . “குடி நீரை பெறுவதற்காக சைக்கிளில் மிக நீண்ட தூரம் சென்று

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

சுமக்க வேண்டியுள்ளது இதனால் கஷ்டங்களை எதிர்நோக்குகிறோம் பல தடவைகள் இது தொடர்பில் உரியவர்களுக்கு சொல்லி இருந்தோம் தீர்வு கிடைக்கவில்லை “ என அப் பகுதி கிராம வாசி ஒருவர் தெரிவித்தார். மனிதனுக்கு தேவை



யாக உள்ள விடயங்கள் ஆரம்பமே இப்படி பிழையாக இருந்தால் எதிர்கால சந்ததிகளின் நிலை என்னவாக இருக்கும் .அன்றாட ஜீவனாம்சத்தை கொண்டு செல்ல கஷ்டப்படும் இந்த நிலையில் முக்கிய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அம்மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

நீரின்றி வாழ்க்கை இல்லை என்ற நிலைக்குள் தள்ளப்பட்ட சீதனவெளி மக்களின் நிலையை கண்டு உதவுவார்களா எனவும் அம் மக்களின் நீண்ட கால கனவாக காணப்படுகிறது. தற்போதைய அதிக வெய்யிலுடன் கூடிய வரட்சியான கால நிலையில் குளங்களின் நீர் மட்டங்களும் குறைவதனால் இப் பகுதி மக்களின் நிலை மோசமாகி விடும் என்ற நிலை காணப்படுகிறது.

வரட்சி காரணமாக நீரின்றி தவிக்கும் இம் மக்களை யார் தான் கண்டு கொள்வார்கள் சிறிய குழந்தைகள்,வயோதிபர்கள்,பாடசாலை செல்லும் மாணவிகளின் நிலை என்னவாக இருக்கும் என சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் .தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காக செல்லும் மக்கள் பிரதிநிதிகள் இவர்களின் அடிப்படை வசதியை கூட தீர்க்க முடியாது கண்டு கொள்ளாமை இருப்பது ஏன் ? மக்களின் இந்த தேவை பூர்த்தி செய்யப்பட்டு இப் பழங்குடி மக்களின் நீர் தாகம் நிறைவேற்றப்பட வேண்டும்.

• • •



# தென்னையில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈ தாக்கத்திற்கான இயற்கை முறைக் கட்டுப்பாடுகள்

தற்போது தீவிரமாகப் பரவும் வெள்ளை ஈயினால் இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந்தோப்புகள் சேதமடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

அதுமட்டுமல்லாது, வீடுகளில் உள்ள தென்னை, கொய்யா, அலங்கார பாம் செடிகள் போன்றவையும் இதன் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்றன.

இவை அதிகமாக செவ்விளநீர் குலைகளின் மஞ்சள் நிறத்தில் ஈர்க்கப்படுவதால் அவற்றை மிகவும் அதிகளவில் பாதித்துள்ளது.



ஏற்றுமதிச் சந்தையில், கடந்த காலங்களில் ஆண்டுக்கு, 95 லட்சம் செவ்விளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு வெள்ளை ஈ பாதிப்பு பரவி வருவதால், எதிர் காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையும் பாதிக்கப்படலாம்.

ஏற்றுமதி மாத்திரமல்லாது இளநீர் வியாபாரம் செய்யும் மற்றும் இதனை சார்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறிக்குள்ளாகின்றது.

### இந்த நோய்த்தாக்கத்தின் பின்னணி

அமெரிக்காவில் 2004-ல், புளோரிடா மாகாணத்திலும் தென்னையில் கண்டறியப்பட்ட வெள்ளை ஈ, இந்தியாவில் முதல்முறையாக 2016-ம் ஆண்டு தமிழகத்தில் தென்னையில் தாக்கம் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தில் நோய் தீவிரமாக பரவிய போது, ஒட்டும் பொறி அட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், அதிக விலை கொடுத்து நஞ்சு பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கி விசிறியும், எவ்வித பயனும் இல்லை என்பதையும், இதற்கு இவற்றின் இயற்கை இரைகவ்விகளான வண்டுகள் பூச்சி மருந்துகளால் அதிகம் அழிந்ததும் ஓர் காரணம் என அப்போதைய செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

2022 ஆம் ஆண்டில் இல் இருந்து இலங்கையில் தீவிரமாக பரவிவருகிறது. தென்னை மட்டுமல்லாது கொய்யா, மா, நாவல், வாழை, வெண்டி, எலுமிச்சை, செம்பருத்தி, சீத்தாப்பழம், கருவேப்பிலை போன்றவற்றையும் இவை தாக்குகின்றன



### வெள்ளை ஈ தாக்கத்தின் அறிகுறிகள்

இவற்றின் முட்டைகள் சுருள் வடிவத்தில் இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். இதன் குஞ்சுகளும், முதிர்ந்த ஈக்களும் ஓலையின் அடியிலிருந்து சாற்றை உறிஞ்சுகின்றன. இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவக்கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுகின்றன. அதனால் ஓலைகளின் மேல் கருப்பு நிறமுள்ள பூஞ்சணம் படர்கிறது.

CSJ அக்ரி

அதிகளவு வெப்பம் மற்றும் குறைந்த காற்றின் ஈரப்பதம் ஆகிய காரணங்களால் இவை அதிகளவு பெருகியிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

மஞ்சள் நிறம் இந்தப் பூச்சிகளைக் கவரும் தன்மையுடையது. அதனால் தான் செவ்விளநீர் செய்கை அதிகமாக பாதிப்புக்குள்ளாகிறது.

### இவற்றின் வாழ்க்கை வட்டம்

“பெண் ஈயைவிட, ஆண் ஈ அளவில் சிறியது. இதன் முன் இறக்கைகளில் கரும்புள்ளிகள் காணப்படும். வயது முதிர்ந்த பெண் ஈ மஞ்சள் நிற நீள்வட்ட முட்டைகளைச் சுருள் வடிவ அமைப்புகளில் ஓலைகளின் அடிப்பகுதியில் இடுகின்றன. முட்டைகள் ஒருவித மெழுகுப் பூச்சுடன் காணப்படும். அதிலிருந்து இளம்பூச்சிகள் வெளிவரும். இவை நான்கு பருவங்களைக் கடந்து, கூட்டுப்புழுப் பருவத்தை அடையும்.

அதற்குப் பிறகு முதிர்ந்த ஈக்களாக வெளிவரும். 20-30 நாட்களில் புழுப் பருவம் வளர்ச்சியடைந்து, கூட்டம் கூட்டமாகத் தென்னை ஓலையின் அடிப்பகுதியை அடையும். காற்றின் மூலம் அடித்துச் செல்லப்பட்டு, ஒரு மரத்தில் இருந்து அடுத்தடுத்த மரங்களுக்கும், அருகில் உள்ள தோட்டங்களுக்கும் பரவி பாதிப்பை ஏற்படுத்தும்.

இவற்றின் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பாக மேலதிக விளக்கங்களை நாம் தமிழ்நாடு வேளாண் பொறியாளர் திரு. பிரிட்டோராஜ் அவர்களிடமும், கொழும்பிலுள்ள எமது CSJ Agriயின் ஆலோசகர்களான விவசாய மற்றும் நுண்ணுயிரியல் விரிவுரையாளர் மற்றும் முனைவர் பட்டம் பெற்ற ஆய்வுக்கூட நிபுணர்களிடம் கீழ்வரும் ஆலோசனைகளைப் பெற்றோம்.



### இவற்றினை கட்டுப்படுத்தும் வழிகள்

**1. பொதுவாக களைகொல்லிகள் மிகையாகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும். (களை கொல்லி விளைவால் தாவரம் சோர்வாக இருப்பதால்)**

**2. தரை வழியே சரியான நீர்ப்பாசனம் கொடுக்காத நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.**

**3. தரை வழியே போதுமான சத்துக்கள் கொடுக்காத நிலங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.**

**4. நோய் எதிர்ப்புத்திறன் குறைவான மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக வரும்.**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உரிமைகளை மழுங்கடிக்கும் பெருந்தேசிய வெறி

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்களை காணியுரிமை பெற்ற சமூகமாக மேலெழும்பச் செய்தல் வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. எனினும் இதன் சாத்தியப்பாடு இதுவரை இல்லாத நிலையில் தொடர்ந்தும் இழுபறியான நிலைமைகளே இருந்து வருகின்றன. இந்நிலையில் பெருந்தோட்டங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 பேர்ச்சஸ் காணியை நிரந்தர உரிமை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கென ஜனாதிபதியால் நான்கு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். மேலும் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் எதிர்வரும் மே மாதத்தில் சாத்தியமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளமையும் நோக்கத்தக்கதாகும்.



ஒவ்வொரு சமூகத்தைப் பொறுத்தவரையிலும் காணியுரிமை என்பது மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு சமூகம் தமது இருப்பையும், அடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு காணியுரிமை உந்துசக்தியாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. உலகில் பல சமூகங்கள் காணியுரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன. அத்தோடு இன்றும் ஈடுபட்டும் வருகின்றன.

இப்போராட்டங்கள் சாதக விளைவுகளுக்கும் வித்திட்டுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.இந்த வகையில் மலையக பெருந்தோட்ட சமூகம் குறித்து நோக்குகையில் இச்சமூகம் இலங்கையில் 200 வருடகால வரலாற்றைக் கொண்டுள்ளபோதும் ஒரு அங்குலமேனும் காணியுரிமை இல்லாத சமூகமாக இருந்து வருவது வேதனைக்குரியதாகும். இம்மக்களுக்கு கனவாகவுள்ள காணியுரிமையை நனவாக்கப்போவதாக ஆட்சியாளர்கள் அவ்வப்போது வாக்குறுதிகளை அள்ளி வழங்கி வருகின்ற போதும் இதுகாலவரை எவ்விதமான சாதக விளைவுகளும் ஏற்படவில்லை என்பதும் தெரிந்ததேயாகும்.

### காணி உச்சவரம்பு சட்டம்

பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் அவ்வப்போது அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்பட்டு வருகின்றமை புதிய விடயமல்ல. இவ்வாறாக சுவீகரிக்கப்படும் காணிகள் கிராமப்புற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வரலாறுகளே இலங்கையில் அதிகமாக காணப்படுகின்றன.இதற்கு பல உதாரணங்களையும் எம்மால் கூறமுடியும்.

1972 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட காணி உச்சவரம்பு சட்டமும், அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளுமே தேயிலைக் காணிகளின் உடைமைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தது. 1972 ம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட காணி உச்சவரம்பு சட்டத்தின் கீழ் இலங்கையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் உடைமைகளுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது.



இதற்கமைய நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 10 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியுடைமைகளும், பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 20 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியார் உடைமைகளும் நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டன.

1972 ம் ஆண்டு காணிச் சுவீகரிப்பின்போது சிறியபகுதி பெருந்தோட்டக் காணிகளே சுவீகரிக்கப்பட்ட நிலையில் 1975 ம் ஆண்டு காணிச் சுவீகரிப்பின்போதே அதிகளவான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. 1972 ம் ஆண்டு முதல் 1975 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 169,208 ஹெக்டேயர் தேயிலைக் காணிகள் சுவீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் காணி உரிமை யில் அடிக்கடி மாற்றங்கள் கொண்டு வரப்பட்ட காணிகளாக பெருந்தோட்டக் காணிகளே காணப்படுவதாக பேராசிரியர் சின்னத்தம்பி குறிப்பிடுகின்றமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.



பெருந்தோட்ட காணிச் சுவீகரிக்கப்பினை மையப்படுத்தி 1980 ம் ஆண்டில் பயனற்ற தேயிலைக்காணிகளென 10,000 ஹெக்டேயர் காணிகள் இலங்கையின் கம்பளை, கண்டி, உலப்பனை, கடுகண்ணாவை போன்ற பகுதிகளில் இனங்காணப்பட்டன.இக்காணிகளை மாற்றுப்பயிர் நடவடிக்கைக்கு பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் உலக வங்கியும் இத்திட்டத்திற்கு அனுசரணையாக இருந்தது. எனினும் சுவீகரிக்கப்பட்ட தேயிலைக் காணிகள் நிலமற்ற கிராமிய மக்களுக்கே பின்னர் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது இத்தோட்டங்களில் வேலை செய்த இந்தியத் தமிழர்களுக்கும் இக்காணிகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில்இக்கோரிக்கைபுறந்தள்ளப்பட்டு கிராமத்தவர்களுக்கேகாணிகள்வழங்கப்பட்டன. பெருந்தோட்டக் காணிகளை சுவீகரிப்பதன் ஊடாக அம்மக்களின் இருப்பு, அடையாளம் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட பலவற்றையும் கேள்விக்குறியாக்கி அம்மக்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்துவதே இனவாதிகளின் நோக்கமாக இருந்தது என்றும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

### துணைபோன அரசாங்கம்

மேலும் மலையக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து திட்டமிடப்பட்ட அடிப்படையில் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கங்கள் துணை போயின. இதன் அடிப்படையிலேயே உசவசம போன்ற தோட்டங்களில் மாற்றுப்பயிர்ச் செய்கை 'பன்முகப்படுத்தல்' என்ற போர்வையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கண்டி, மாத்தளை, யட்டியாந்தோட்டை, அவிசாவளை, போன்ற பகுதிகளில் தோட்டக் காணிகளில் இருந்தும், லயன்களில் இருந்தும் வெளியேற்றப்பட்டனர்.



இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் நகரப் பகுதிகளில் பிச்சைக்காரர்களாக சுற்றித் திரிந்த வரலாறானது மலையக வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமேயாகும். மலையக மக்களின் பலத்தைக் குறைக்கும் வகையில் 1972,1975,1977ம் ஆணடு காலப்பகுதியில் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இது இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கும் அடிப்படையான நிலையில் இதனால் மலையக மக்கள் அதிகமான பாதிப்பிற்கு உள்ளாகினர் என்றும் கருத்துப் பகிர்வுகள் உள்ளன.

1958,1977,1981 ஆகிய ஆண்டுகளிலும் அதனைத் தொடர்ந்தும் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் மலையக மக்கள் அதிகரித்த பாதிப்பிற்கு உள்ளாகினர். இவ்வாறு பாதிப்பிற்கு உள்ளானவர்களும், 1972 ம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட வேலையின்மை பிரச்சினை, உணவுப் பற்றாக்குறை என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்பிற்கு உள்ளானோருமென கணிசமான தொகையினர் வட மாகாணத்திற்கு சென்று குடியேறுவதில் ஆர்வம் செலுத்தினர்.

இவ்வாறு சென்றவர்கள் இலங்கை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தேசிய நீக்கம் செய்யும் முயலும்

# தமிழ் சினிமா

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மௌனிப்பிற்குப் பின்னர், அவர்கள் விளம்பரப் பண்டமானார்கள். தமிழீழத் தேசியத் தலைவரின் ஒளிப்படங்கள், தலைவரின் மாற்றுப் பெயர், முக்கிய போராளிகளின் பெயர்கள், நினைவுப்பொருட்கள் எனப் பல விடயங்கள் வியாபார, விளம்பர முக்கியத்துவத்தைப் பிடித்தன. இந்த விதத்திலாவது தமிழீழ விடுதலைப் புலிகளும், தலைவரும் நினைவில் நின்று நிலைக்கின்றனர் என்கிற உயரிய எண்ணத்தில் இந்தப் போக்கினைத் தமிழர்கள் கடந்துவிட்டனர். அவ்வேளையில் அதனைக்கண்டிக்கவும், தடுக்கவும் தவறியதன் விளைவு தற்போது விடுதலைப் புலிகளினதும், மாவீரர்களினதும், தமிழீழ தேசியத் தலைவரினதும் உண்மை வரலாற்றை சிதைக்கும் – அழிக்குமளவுக்கு வந்துநிற்கிறது.







குறிப்பாக எதைக் காட்டினாலும் வியாபாரமாக்கிவிடும் தமிழக ஊடகச் சூழல் இந்த நிலையை உருவாக்கியுள்ளது. தமிழகத்தின் மைய ஊடகமாகவும், தமிழக மக்களின் சிந்தனையை தீர்மானிக்கும் சக்தியாகவும் இருக்கின்ற சினிமா இத்தகையதொரு வியாபாரத்தில் கள்ளாகட்டுகிறது.



**துரைராஜா ஜெயராஜா**

உதாரணமாக, அண்மைக்காலமாகத் தயாரிக்கப் படும் தமிழ், மலையாளம், தெலுங்கு திரைப் படங்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலை வரது கதையையும், போராளிகளின் கதையையும் அப்படியே எடுத்து, தமக்கு ஏற்றாற் போல் மசாலாத் தனங்களை கலந்து திரைக்குக் கொண்டு வருகின்றன. இவற்றில் சொல்லப்படும் கதைமிகுந்த கதாநாயகத்தனம் பொருந்துவதாக அமைவதுடன், தலைவரும் விடுதலைப்புலிகளும் செய்யாத பல செயல்களை, குற்றங்களை சுவாரஸ் யத்திற்கு ஏற்றாற் போல் சேர்த்துக்கொள்கின்றன. இத்தகைய திரைப்படங்கள்தலைவர் குறித்தும், தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்தும் தவறான சித்திரிப் புக்களையும், வரலாற்றையும் மக்கள் மத்தியில் விதைக்கின்றன. ஈழத்தமிழரது குருதிதோய்ந்த விடுதலைப் போராட்ட வரலாற்றில் விசத்தை விதைக்கின்றன. எங்களின் உயிருள்ள கதைகளைத் திருடி, அதனை தமிழ் சினிமாவாக மாற்றி வியாபார மாக்கியதன் மொத்த விளைவுதான் இது.




இதற்கு அடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளின் பெயர்களில் தமிழ் திரைப்படங்களின் தலைப்புக்களை வைப்பதும் ஒரு வியாபாரத் தந்திரமாக வருகின்றது. “மாவீரன்”, “மாவீரன் கிட்டு”, “கப்டன் மில்லர்” எனஅண்மையதிரைப்படங்களின்தலையங்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளின் பெயர்களைத் தாங்கியவையாக வருகின்றன. அதிலும் தம் தியாகத்தினால் தமிழ் மக்கள் மத்தியில் அதிக விருப்பினைப் பெற்ற போராளிகளின் பெயர்களில் திரைப்படங்களைத் தயாரிக்கின்றனர். குறித்த போராளிகளின் தியாகங்களுக்கும், அவர்கள் போராட்ட களங்களில் ஆற்றிய பங்களிப்புக்கும் துளியளவு தொடர்புமில்லாத வகையில் அமைக்கப்படும் இந்தப் படங்களின் திரைக்கதைகளில் போராளி களின் பெயர் வெறும் வணிகத்துக்காகவே பயன் படுத்தப்படுகின்றது. அதாவது தமிழக சினிமாவுக்கு அதிக வருமானத்தைத் தருகின்ற புலம்பெயர் தமிழர்களை இலக்குவைத்து உருவாக்கப்படும் இத்தகைய தலைப்பிலான தமிழ் திரைப்படங்கள், நம் மாவீரர்களின் வரலாற்றையே குழிதோண்டிப் புதைக்கின்றன. நெல்லியடியில் பெருந்தாக்குதலை நடத்தி, தமிழர் விடுதலை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அணுக்கரு சிதைவும், மொழிவழி தேசிய நிலைப்புத் தன்மையும்!

உலகில் எத்தனை மொழிகள் உள்ளதோ, அத்தனை நாடுகள் பிறப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு மொழிவழி தேசிய இனமும் இறையாண்மை கொண்ட தனி நாடாக மாற முழு உரிமை கொண்டவை. அதுவே இயற்கை; அதுவே இயல்பு.

பலமில்லாத, பயம் கொண்ட, அளுமைத் திறனற்ற பெரும்பான்மை மக்கள் கூட்டத்தால் இந்த இயற்கையின் இயல்பை புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் இன்று புரிந்துகொள்ளவில்லை என்பதற்காக நிலைப்புத் தன்மையுடன் வாழ விரும்பும் ஒரு மொழிவழி இனத்தின் ஆன்ம விருப்பத்தை எல்லாம் உங்களால் ஒருபோதும் தடுக்க முடியாது.

ஒரு மொழிவழி இனத்திற்கு ஒரு நாடு என்றால் இந்த பூமியில் குறைந்தபட்சம் *10* ஆயிரம் நாடுகள் உருவாக வேண்டுமே.. அது சாத்தியமா? என்பதே உங்களின் அடுத்த கேள்வி. இங்கு சாத்தியமா, சாத்தியம் இல்லையா..? என்பது கேள்வியே இல்லை. தேவையா? தேவை இல்லையா..? என்பதே கேள்வி. இன்றைய சூழலில் சில இனங்கள் முதிர்ச்சி பெற்று தனி நாடு கேட்க கூடும். சில இனங்கள் முதிர்ச்சி இன்மை காரணமாக தனிநாடு கோரிக்கையை எழுப்பாமல் இருக்கலாம். இது வெறும் நிகழ்கால முடிவாக மட்டுமே அமையும்.

அரசியல் தெளிவு பெற்ற இனம், தன்னுள் எந்த பிளவுகளுக்கும் இடமளிக்காமல், தன்னை இறையாண்மை கொண்ட ஒரு தேசிய இனமாக உணரும் பட்சத்தில், இன்றோ, நாளையோ, நாளை மறுநாளோ இந்த பூமியில் ஒரு தனி நாடு பிறப்பதை ஒருபோதும், ஒருவராலும் தடுக்க இயலாது.

அதன்பொருட்டு, உலக வல்லாதிக்க நாடுகள் அதனதன் விருப்பு, வெருப்பிற்கு ஏற்ப புதிதாக பிறக்க துடிக்கும் நாட்டை ஆதரிக்கலாம், எதிர்க்கலாம், முடக்கலாம், வளர்க்கலாம், அழிக் கலாம். ஆனால், அதுவே ஒரு மொழிவழி நாடு உருவாவதற்கான இறுதியான வழியும் அல்ல; தடைக்கல்லும் அல்ல. அந்த தேசிய இனத்தின் உறுதியும், வலிமையும், ஆளுமைத் திறனும்தான், அது தனிநாடாக மாறுவதை, நிலைத்து நீடித்து வாழ்வதை இறுதி செய்யும் இயல்பு கொண்டது.







ஒரு நாட்டை ஒட்டி வைக்கும், ஒட்டுப் பசை தான் 'தேசப் பற்று'. அந்த பசை எந்த உள்ளீடால் ஆனது என்பதைப் பொறுத்தே, அந்த நாட்டின் வலிமைத் தீர்மானிக்கப்படும். சாதி, மத கருத்தியலை உள்ளீடாக கொண்ட அந்த பசையை நீண்ட நாள் ஒட்டுத் தன்மையுடன் இருக்க முடியாது. எடுத்துக்காட்டு, பாகிஸ்தானில் இருந்து வங்கதேசம் பிரிந்ததை பார்க்க. மதம் என்ற உள்ளீடு ஒட்டுப் பசையால் அந்த நாடுகள் பிரிவதை தடுக்க முடியவில்லை. ஆனால், மொழி என்ற உள்ளீடு எல்லாவற்றையும்விட வலிமை மிக்கது.



பேராசிரியர்
ஆ. அருள் இனியன்

வரலாற்றில் சில நேரங்களில் மொழிவழி நாடுகள் கூட பிரிந்து இருந்தது உண்டு. ஆனால், அவை தனிமனிதர்களின் பேராசைக் கனவால், தவிர்க்க முடியாத சூழலால் நிகழ்த்த விபத்துக்கள் தான். இயற்கையின் இயல்பிலும் சில நேரங்களில் நிபந்தனைகள் உண்டு அல்லவா, அந்த வகையில் சில பிளவுகள் உண்டு. ஆனால், உறுதியாக ஒரு மொழிவழி இனம், குறைந்தபட்சம் ஒரு நாட்டை உருவாக்கும் என்பது இயல்பு.

சில நேரங்களில் இந்தியா போன்ற பலப் பட்டறை நாடுகளும் உருவாகும். வரலாற்றில் இதுவொரு இடைக்கால தீர்வு. இதுவொரு இடைக்கால தீர்வாகத்தான் இருந்தது என்பதை எதிர்காலத்தில் பிறக்கும் மனிதர்கள் நன்கு உணர் வார்கள். நிகழ்காலத்தில் அடிமையாக வாழப் பழகிய நமக்கு இது புரியாது.

பல மொழிவழி நாடுகள் இணைந்து இருப்பதும் இயற்கையின் இயல்பு தான். ஆனால், அதன் நிலைப்புத் தன்மை எத்தகையது என்பதே ஆய்வுக்குரியது. யுரேனியம், தோரியம் போன்ற பெரிய அணுக்கருக்கள் நிலைப்புத் தன்மை அற்றவை. சிறிய அணுக்கள் இணைந்து பெரிய அணுக்களை உருவாக்கும். ஆனால், அதுவொரு இடைக்கால அமைப்பு மட்டுமே; இடைக்கால தீர்வு மட்டுமே.

அணுக்கரு சிதைவு என்பது ஒரு உடனடி நிகழ்வு அல்ல. அது பொறுமையானது. இடம், பொருள், காலம் பொறுத்தது. சரியான வாய்ப்பிற்காக பெரிய அணுக்கருக்கள் காத்து இருக்கும். அவை சிதைந்து, இரும்பு போன்ற மீமிக நிலைப்புத் தன்மை கொண்ட தனிமம் உருவாகும். இதுவே இயற்கை; இதுவே இயல்பு.

பல மொழிவழி நாடுகளை உள்ளடக்கிய ஒரு நாடு போலியான ஒட்டுப் பசைகளைத் தேசப் பற்று என்ற பெயரில் உருவாக்கி, ஒரு மொழிவழி நாட்டை மட்டும் சுரண்டி கொழுக்கும் செயலை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. *GST* வரிச் சுரண்டல், இந்துத்துவ வெறியூட்டல், பன்முகத் தன்மை சிதைப்பு என்பதை எல்லாம் நிகழ்காலத்தில் அற்ப பதராக வாழப் பழகிய நம்மை போன்றவர்கள் சினிமா, மது, பணம், புகழ் போதையில் கடந்து மறந்து செல்லலாம், ஆனால், வரலாறு ஒருபோதும் மறந்து கடந்து செல்லாது. அது நினைவில் வைத்துக் கொள்ளும். காலம் பார்த்து எதிர்வினை ஆற்றும்.

பலபட்டறை நாடு யுரேனியம் தோரியம் போன்றது. மொழிவழி நாடு என்பது இரும்பு போன்றது. நிலைப்புத் தன்மை நோக்கி நகர்வது தான் மொழிவழி தேசிய அரசியல். அதுவே இயற்கை; அதுவே இயல்பு.

**அரசியல் கற்க...!**

## உரிமைகளை... தொடர்ச்சி ...

தமிழர்கள் செறிந்து வாழும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் காலப்போக்கில் தமது இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்துவிடும் போக்குகள் காணப்படுவதாகவும், இவ்வாறான மக்கள் வெளியேற்றம் குடித்தொகை ரீதியாக மலையக மாவட்டங்களில் இந்தியர்களின் வலிமையைக் குறைத்துவிட்டதாகவும் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே மலையக பெருந்தோட்டங்களில் காணப்படும் நிலப்பயன்பாடும், காணியுரிமையும் தெளிவாக பௌதீக ரீதியாக ஒரு இனப்பாரபட்சத்தைக் காட்டி நிற்பதாக அமரர் அ.லோறன்ஸ் தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பெருந்தோட்டம் என்பது வெறும் தோட்டக் காணிகளாகவும், அதில் காணப்படும் லயன் முறைகளையும், வேறு எந்த வகையான வீடமைப்பு முறையைக் கொண்டிருந்தாலும் அதனை வெறும் பௌதீக அம்சங்களாக மாத்திரம் பார்க்கக்கூடாது. அதில் ஒரு சமூகம் முடக்கப்பட்டுள்ளதையும், அந்தப்பகுதி சுதந்திரமாக வளர்ச்சியடைவதற்கான வழிவகைகள் யாவும் மூடப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தநிலையிலும்கடந்த200வருடங்களாக பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் மூலம் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு வித்திட்டுள்ள பெருந்தோட்ட மக்களுக்கு இன்றும் கூட அவர்கள் இருக்கும் வீடும், காணியும் உரித்தாக்கப்படவில்லை. எவ்வளவோ காணிகளும், வளங்களும் வீணாக விரயமாகும் போது ஏழு பேர்ச் காணியேனும் மலையக பெருந்தோட்டங்களில் வாழும், சுமார் 3 இலட்சம் குடும்பங்களுக்கு அரசாங்கம் வழங்கத் தயாராக இல்லை. சுதந்திரத்தின் பின்னர் மாறிமாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் மலையக மக்களுக்கு வீடு மற்றும் காணியுரிமையை வழங்க பிடிவாதமாக மறுத்து வருவதற்கு அவர்களுக்கு இருக்கும் பெருந்தேசிய வெறியே காரணமாகும். பெருந்தோட்டக் காணிகளில் அல்லது பெருந்தோட்டத் துறையில் இந்நாட்டின் ஏனைய இனத்தவர்கள் வாழ்ந்திருந்தால் அவர்களுக்கான காணியுரிமை, வீட்டுரிமை மற்றும் அடிப்படை வசதிகள் நிச்சயமாக உருவாக்கப்பட்டிருக்கும் என்று லோறன்ஸ் குறிப்பிடுகின்றார்.

### தேசியக் கொள்கை வகுப்பு

பெருந்தோட்ட மக்களின் காணியுரிமை இது வரை வாக்குறுதி வட்டத்திலேயே முடங்கிப்போன நிலையில் தற்போது இதனை சாத்தியப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.பெருந்தோட்டங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 பேர்ச்சஸ் காணியை நிரந்தர உரிமை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென ஜனாதிபதியால் நான்கு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். தேசிய ரீதியிலான 86 வீதமானோருடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களில் 08 சதவீதமானோருக்கு மாத்திரமே சொந்தவீடு காணப்படுகின்றது.

இந்த வரலாற்று அநீதியை நாம் சரிசெய்வோம்.பொருத்தமான காணிகள் மற்றும் பயனாளிகளை அடையாளம் காணுதல், வரைபடம் இடுதல், அளவீடு செய்தல், பத்திரங்களை தயாரித்தல் போன்ற நடைமுறைகளை முன்னெடுப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. குறித்த திட்டத்தின் மூலம் இரண்டு இலட்சம் குடும்பங்கள் பயனடைவார்கள். இதேவேளை பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் மே மாதத்தில் சாத்தியமாகும் என்றும் அமைச்சர் ஜீவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி உறுதியளித்தவாறு காணிகளை உறுதிப்பத்திரங்களுடன் ஒப்படைக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு தலவாக்கலை பிரதேச செயலகத்தில் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. கண்டியை தளமாகக் கொண்டியங்கும் ஜன நாயக இளைஞர் காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் டயகம, அக்கரபத்தனை, லிந்துலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இத்தகைய நடவடிக்கைகள் மலையக மக்கள் காணியுரிமையை பெற்றுக் கொள்வதற்கு உந்துசக்தியாகும். இதேவேளை மலையகமக்களின்காணிமற்றும்வீட்டுரிமையை நனவாக்கும் நோக்கில் ஒரு தேசியக் கொள்கை வகுக்கப்படுவது அவசியமாகும் என்பதையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

• • •

## தேசிய நீக்கம்... தொடர்ச்சி ...

வரலாற்றுக்கே பெரும் பாய்ச்சலை ஏற்படுத்திய ஒப்பற்ற மாவீரன் கப்டன் மில்லர் என்ற பெயரை இப்போது இணையதளங்களில் தேடினால், தமிழக நடிகர் தனுஸ் கற்பனைக்கு விஞ்சிய துப்பாக்கியுடன் நிற்கும் படங்கள்தான் முதற்தெரிவாக வருகின்றன. இந்தத் திரைப்படம் வெளியாக முன்பு இப்படியொரு நிலை இருந்ததில்லை. இதுவேதான் கிட்டு அண்ணையின் பெயரைத் தேடும்போதும் நடக்கிறது. வெறும் வணிக வெற்றிக்காகத் திருடப்படும் நம் உத்தம மாவீரர்களின் பெயர்கள், அவர்தம் வரலாற்றையே சந்ததி அறியாமல் போகும் நிலையைத் இந்திய சினிமா உருவாக்கித்தந்திருக்கிறது.

இந்த விடயங்கள் விளங்காத இனவாதத்தைக் கக்கும் சிங்கள பத்திரிகையொன்று, கப்டன் மில்லர் எனத் தலைப்பிட்டு, தனுஸ் நடித்த படத்தின் விளம்பரம் வெளிவந்தவுடனேயே தமிழ் பயங்கரவாதிகளின் வரலாற்றைப் படமாக எடுக்கும் தமிழக தீவிரவாதிகள் எனவும், தமிழக சினிமாவை சிங்களவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற பரப்புரையை மேற்கொண்டிருந்தது. சிங்களவர்களின் உலகம் எப்போதும் தமிழர்களை மட்டுமல்ல, தமிழர்களின் பெயரையும்கூட பயங்கரவாத மனநிலையில் நின்று பார்க்கும் மனநிலையின் உச்சமாக இதனைக் கருதலாம். ஆனால் இதன் மூலமாக தமிழர்களின் விடுதலை வரலாற்றுக் கதாநாயகர்களின் வரலாறு அழிக்கப்படுகிறது என்கிற உண்மைச் செய்தியை அறிந்தால், அதே பாணியில் அவர்களும் பல சிங்கள திரைப்படங்களை எடுப்பார்கள். ஏற்கனவே தலைவர் குறித்தும், விடுதலைப் புலிகள் அமைப்பில் சிறுவர் போராளிகள் இருந்தனர் என்பது குறித்தும் சிங்கள சினிமா தயாரித்த ஒரு படத்தில் வரும் சிறுவர் போராளிகள் தொடர்பான காட்சிகளை கத்திரித்து, தமிழீழ விடுதலைப்புலிகள் சிறுவர்களின் கையில் ஆயுதத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என நடுநிலையாளர்கள் கட்டுரைகள் எழுதுவதைப் பார்த்திருப்போம். இதுமாதிரியான செயல்களுக்கும் தற்போது தமிழ் சினிமாக்கள் களம் அமைத்துக் கொடுக்கும் வேலைகளைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றன.

எனவே ஈழத்தமிழர்களைத் தொப்புள் கொடி உறவுகளாகக் கருதும் தமிழகம் இந்த மாதிரியான வரலாற்றுத் திரிபுபடுத்தல்களைக் கைவிடவேண்டும். போராளிகளின் தியாகத்தை வியாபாரப் பண்டமாக மாற்றுவதை நிறுத்த வேண்டும்.

• • •

## ஏமாற்றப்படும்... தொடர்ச்சி ...

கடன் பட்டு விவசாயத்தை செய்கின்ற விவசாயிகள் அறுவடையின் போது என்ன விலை என்றாலும் நெல்லை விற்று கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் விவசாயிகள் காணப் படுகின்றார்கள்.

சேதனப் பசளை என்று அனைத்து விவசாயிகளையும் விவசாயத்தையும் முழுமையாக சேதம் செய்தார்கள். பயிர்ச் செய்கை ஆரம்பிக்க முன் பாவிக்க வேண்டிய பசளைக்கு உர மானியம் என்று மிக சிறிய தொகையினை அறுவடையின் போது வழங்குகின்றார்கள். அறுவடை செய்யும் போது கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லை விவசாயிகளிடம் நெல் இல்லாத போது அதற்கான பணத்தை ஒதுக்குகிறார்கள்.

இவ்வாறே தொடர்ந்தும் படம் காட்டப்பட்டு ஏமாற்றப்படுகின்ற போது எவ்வாறு விவசாயகளால் மீள முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## வெடுக்குநாறி... தொடர்ச்சி ...

உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் விளக்கமறியலில் உள்ளவர்களின் உறவினர்கள் பார்வையிடச் சென்றிருந்தனர். இதன்போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள8 நபர்களின் ஐவர் நேற்றுக் காலை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறிப்பாக நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படும்போதே அவர்கள் உணவை எடுத்திருக்கவில்லை.ஆலயப்பூசகர்மதிமுகராசா, திலகநாதன் கிந்துஜன், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், துரைராசா தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய ஐந்து பேரும் நீதி கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## கோட்டா எழுதி... தொடர்ச்சி ...

இவர்களுடைய இந்த பேரினவாத அணிதிரட்டல் என்பது ஊழலையும் தவறான ஆட்சி முறையையும் மூடிமறைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதை சிங்கள சமூகம் அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதித்தால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை. ஆனால், ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரை சிறுபான்மையினருக்கு எதிரான அரசியலும், வெளிநாடுகளின் சதி என்கின்ற கற்பனாவாத பிரசாரங்களும்தான் அவர்களுக்குக் கைகொடுத்து வந்திருக்கின்றது. அவர்கள் அதனை விடுத்து வேறு எதனையும் செய்யப்போவதில்லை.

• • •

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

பயிற்சிகளை குண்டுகளை செயலிழக்கவைக்கும் படையினர் மேற்கொண்டபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் வெடிப்புக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

பலர் கடுமையாக காய மடைந்துள்ள போதும் உயிருக்கும் ஆபத்துக்கள் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. இந்த தளம் புலனாய்வுப்படையினர் மற்றும் உள்ளூர் படையினருக்கு பயிற்சிகளை வழங்கும் தளமாகும்.

## நான் ஏன் தப்பி ... தொடர்ச்சி ...

முன்னாள் இரணுவத்தளபதி சரத் பொன்சேகாவிடம் கேட்டபோது எனது நிலைப்பாடு தொடர்பில் வெளிப்படையான அறிக்கையை வெளியிட்டாலே பதவியை ஏற்பேன் என மறுத்துவிட்டார். ஆனால் இந்த நிலையில் அந்த சவாலை ஏற்றுக்கொண்டவர் ரணில் விக்கிரமசிங்கா மட்டுமே.

கலவரம் உக்கிரமடைந்தது. படையினரால் அதனை கட்டுப்படுத்த முடியவில்லை. படைத்தளங்கள் மற்றும் காவல்நிலையங்களுக்கு வெளிநாட்டு அதிகாரிகள் செல்வதை கட்டுப்படுத்தி வைத்திருந்தோம் ஆனால் அது தளர்த்தப்பட்டதால் படையினருக்குள் அதிக ஊடுருவல்கள் ஏற்பட்டு இருந்தது. சவீந்திரசில்வா மீது கொண்டுவரப்பட்ட பயணத்தடை ஏனைய படையினரின் மனிநிலையை பாதித்தது. தம்மீதும் தடைகள் கொண்டு வரப்படும் என அஞ்சிய அவர்கள் கலவரத்தை அடக்குதவற்கு அரசுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவில்லை.

இராணுவத்தளபதி சவீந்திரசில்வாவுக்கும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்னாவுக்கும் இடையில் புரிந்துணர்வுகள் இருக்கவில்லை. எனது வீடு தாக்கப்பட்டபோது அவர்கள் இருவரும் சங்கரிலா ஆடம்பரவிடுதியில் இடம்பெற்ற திருமணவிழாவில் கலந்துகொண்டிருந்தனர். கலவரத்தை தடுப்பதற்கான உத்தரவுகளை வழங்குவதைவிடுத்து மறுநாள் காலை 10 மணிக்ளே என்னைவந்து பார்த்தனர். அப்போதே எனக்கு வலுவான சந்தேகம் ஏற்பட்டது.

எனினும் இந்த கடுமையான நேரத்தில் இந்தியா என்னைப் பாதுக்காக்க முற்பட்டது. என்னை பதவிவிலக வேண்டாம் என அழுத்தம் தந்தது. நிதிநெருக்கடியை சமாளிக்க 4 பில்லியன் டொலர்களை தந்தது. எனவே இந்தியாவுக்கு நான் எப்போதும் கடமைப்பட்டவன். நான் பதவிவிலக முன்னரே இந்தியா எமது பொருளாதாரத்தை சரிசெய்துவிட்டது.

2015 ஆம் ஆண்டு எனது சகோதரர் மகிந்தாவின் ஆட்சியை மாற்றவும் இந்த மேற்குலக நாடுகள் தன் பணியாற்றின. 2006 ஆம் ஆண்டு சீனாவின் திட்டங்கள் இலங்கைக்குள் வந்ததில் இருந்து தான் பூகோள அரசியல் சிக்கல்கள் ஆரம்பித்தன. 2005 ஆம் ஆண்டு தனிநபர் வருமானம் ஆண்டு ஒன்றிற்கு 1,240 டொலர்களாக இருந்தன. ஆனால் 2014 ஆம் ஆண்டு அது 3,819 டொலர்களாக அதிகரித்திருந்தது. எனவே எமது ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்ததே தவிர விழவில்லை.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்காவின் வெளிவிவகாரத் திணைக்களத்தின் மூன்றாம் நிலை உயர் அதிகாரியான விக்டோரியா நியூலான்ட் கொழும்பு வந்து என்னை சந்திதிருந்தார். பொருளாதார வீழ்ச்சியை தடுப்பதற்கு உதவுவதாக கூறினார். 30 ஆண்டுகாலமாக அமெரிக்காவின் கொள்கைவகுப்பளர்களில் ஒருவராக பணியாற்றிய அவரின் வருகையின் பின்னர் நிலமை மேலும் மோசமானது என அவர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், படைத்தளங்களுக்கு சென்ற வெளிநாட்டுதூதுவர்களால் படைக்கட்டமைப்பு சீர்குலைந்ததாக கோத்தா தெரிவித்த கருத்து தொடர்பில் கொழும்பில் உள்ள ரஸ்ய தூதரகம் எந்த நாடு என்ற விளக்கத்தை கோரியுள்ளது.

மேலும் விக்டோரியாவின் வரவுடன் கோத்தபாயா அமெரிக்காவின் பக்கம் சாயலாம் என்ற அச்சம் ஏற்பட்டதால் இறுதிநேரத்தில் இந்தியாவும் அவரை கைவிட்டதுடன், அவர் பாதுகாப்பாக தப்பிச் செல்வதற்கு மாலைதீவில் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தியிருந்ததாக கூறப்படுகின்றது.

• • •

## தொல்பொருள்... தொடர்ச்சி ...

பாரிய பின்னடைவுக்குள் தள்ளியது. ஆனால், அதிலிருந்து பாடம் படிக்க வேண்டும் என்ற எண்ணம், பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்குக் கிடையாது. இலங்கையை சிறுபான்மையினர் அல்லாத பௌத்த சிங்கள நாடாக நிறுவிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, எவ்வளவு விலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகிறார்கள். அது வரலாற்று ரீதியாக கடத்தப்பட்டு வரும் மகாவம்ச பௌத்த அடிப்படைவாத மனநிலையில் இருந்து வரும் ஒன்று.

கச்சதீவில் இரகசியமாக புத்தர் சிலை அமைக்கப்பட்டமை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தமை, நிலாவரைக் கிணற்றடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை, வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்டமை போன்றன தொல்லியல் திணைக்களமும் அதன் இணக்க சக்திகளும் தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புக்கு சில உதாரணங்கள்.

பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தில் இருந்த காலத்தில் கூட, குருந்தூர் மலையை ஆக்கிரமிப்பதற்கு தென்னிலங்கையிலிருந்து பெருமளவு பஸ்களில் பௌத்த பிக்குகளும், சிங்கள கடும் போக்காளர்கள் பலரும் முல்லைத்தீவுக்கு வந்தமையை நாம் பார்த்தோம். அதாவது, தமிழர் தாயகத்தை பௌத்த – சிங்கள மயமாக்குவதற்காக என்ன விலையைக் கொடுப்பதற்கும் அவர்கள் தயாராகவுள்ளனர்.

அதேவேளையில், தொல்லியல் திணைக்களத்தை ஆட்சித் தலைவர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது. அங்கு இருப்பவர்கள் எல்லாரும், பௌத்த அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதற்காக தெளிவாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள். அதேவேளையில் புத்திஜீவிகள். அவர்கள் அரசாங்கத்தின் உத்தரவுகளை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. ஆட்சியில் இருப்பவர்கள் ஐந்து, ஆறு ஆண்டுகளில் மாறக் கூடியவர்கள். அவர்களை கருத்தில் எடுக்க வேண்டியதில்லை என்ற மனப்பான்மையுடன்தான் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

அரசாங்கத்தின் தலைவர்களைப் பொறுத்தவரையிலும், தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுவது தமது எதிர்கால அரசியலுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அஞ்சுகிறார்கள். அதனால், தொல்லியல் திணைகளத்தின் அடிமைகளாகவே அவர்கள் இருப்பார்கள்.

தமிழ் மக்கள் இந்த சவாலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது தான் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வி. தற்போதைய நிலையில் இரண்டு விடயங்கள் ஆரோக்கியமானவையாகத் தெரிகின்றன. பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் வெடுக்குநாறிமலை விவகாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளன. இரண்டாவது, மக்கள் இதற்கானபோராட்டங்களில்தாமாகவே முன்வந்து பெருமளவில் இணைந்துகொண்டார்கள். ஆனால், இதுமட்டும் போதாது. இந்த சவாலை எப்படி எதிர்கொள்ளலாம்? இதனை எவ்வாறு சர்வதேசமயப்படுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம் என்பதை தாயகத்திலும், புலம்பெயர்ந்தும் இருக்கின்ற தமிழர் தரப்பினர் ஆராய்ந்து அதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலை வகுத்து செயற்பட வேண்டும். இல்லையென்றால்... தமிழர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதற்கான அடையாளத்தை கூட மகாவம்சம் இல்லாமல் செய்துவிடும்!

• • •

## சமூகவலைத்தள ... தொடர்ச்சி ...

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை நியாயமான எல் லோருக்கும் நீதியான வர்த்தக சட்டங்களுக்கு முரனானது. ஏனைய நாடுகளின் வர்த்தகத்தை பறிமுதல் செய்வதில் அமெரிக்கா ஒரு தெருச்சண்டியர் போல நடந்துகொள்வதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் வென்பின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 170 மில்லியன் மக்கள் ரிக் ரொக் சமூகவலைத்தளத்தை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அதனை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என அமெரிக்கா தெரிவித்து வருகின்றது. ஆனால் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ருவிட்டர் மற்றும் முகநூல் ஆகிய சமூகலைத்தளங்களால் ஏனைய நாடுகளின் பாதுகாப்புக்கு எற்படும் அச்சங்கள் குறித்து அமெரிக்கா கவலைகொள்வதில்லை என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அமெரிக்காவின் இந்த முடிவக்கு எதிராக அமெரிக்காவின் அரசமாளிகை முன்பாக ரிக் ரொக் சமூகவலைத்தளத்தினை பயன்படுத்துவோர் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.



## தென்னையில்... தொடர்ச்சி ...

**இதனால் தொடர்ந்த பராமரிப்பு மிகவும் அவசியம்.** மாதம் ஒருமுறை குறைந்தபட்சம் 50 மில்லி சூடோமோனஸ் நுண்ணுயிர் உரத்தை நீருடன் கலந்து மரத்தை சுற்றி ஊற்றவேண்டும். இதனை மாதம் ஒருமுறை செய்யும் போது மரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

சரியான காலத்தில் வழங்கும் இடு பொருட்கள் மூலம் போசணையை உறுதி செய்யும் போது தென்னை மட்டைகள் வலுவாகி ஓலைகள் உறுதியாகி, வெள்ளை ஈயின் தாக்கத்தை, பரவலாக்கத்தை எதிர்க்கும் அளவிற்கு ஓலையின் தோல் பகுதி தயாராகிவிடும்.

வெள்ளை ஈயானது காற்றில் பறந்து வரும் ஒரு அமைப்பாகும். இதனை தடுக்கும் பல பொறிமுறைகள் கூறப்பட்டாலும், உண்மையில் ஒரு மரம் இதனை வீரியமாக எதிர்ப்பதற்கு தயாராக உள்ள சூழ்நிலையை உறுதிசெய்வதே முக்கியமான படிநிலையாகும்.

மரத்தில் போசணை தேவையை, ஜீவாமிர்தம் அல்லது மீன் அமிலம் மூலம் மரத்திற்கு கொடுக்கலாம்.

இவற்றை விடவும் சற்று நவீன முறையில் இயற்கை விவசாயம் செய்பவர்கள் EM கரைசலை மரத்திற்கு கொடுக்கலாம்.

மேற்கூறியவற்றை விவசாயியின் பொருளாதார வசதிக்கேற்ப வாரம் ஒருமுறை சரியான அட்டவணைப்படி கொடுக்கவும். இவற்றின் மூலம் வெள்ளை ஈ தாக்கத்தை வருமுன் காக்கலாம்.

அதற்கும் மீறி கட்டுப்படுத்த முடியாதுள்ளது எனில் கடைசி முயற்சியாக நஞ்சற்ற வேர்ட்டிசீலியம் லக்கானி உயிர் உரத்தை 14 நாட்களுக்கு ஒருமுறை தொடர்ந்து பவர்ஸ்பிரேயர் மூலம் விசிறுவதன் மூலம் இவற்றை நன்கு கட்டுப்படுத்தலாம். (எமது முகநூல் பக்கத்தில் வேர்ட்டிசீலியம் லக்கானி எனும் நுண்ணுயிரி பற்றிய கட்டுரைக்கான சுட்டி

மஞ்சள் ஒட்டுப்பொறிகளை ஒரு ஏக்கருக்கு குறைந்தது 10 என்ற எண்ணிக்கையில், 6 அடி உயரத்தில் தொங்க விட வேண்டும். மஞ்சள் நிறத்தால் கவரப்பட்டு வரும் பூச்சிகள் அட்டையில் ஒட்டிக்கொள்ளும். அதன் பிறகு துணியால் அதை துடைத்து விட்டு, மீண்டும் ஒட்டுப்பொறியில் எண்ணெய் தடவி வைக்க வேண்டும்.

மரத்தில் உள்ள பூச்சிகளின் வளர்ச்சியைத் தடுக்க, இலை மட்டைகளில் உள்ள ஓலைகளின் அடிப்புறத்தில் நன்கு படுமாறு தண்ணீர் விசிறித் தெளிக்கலாம்.

இவற்றின் இரை விழுங்கிகள் இந்த வளர்ந்த பூச்சிகளை நன்றாக கட்டுப்படுத்துவதால் தாக்கப்பட்ட தோட்டங்களில் ஏக்கருக்கு 1,000 என்ற எண்ணிக்கையில் விடுவதன் மூலம் வெள்ளை ஈக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வகை வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும்போது 'கொக்ஸினெலிட்' பொறி வண்டுகள், 'என்கர்ஸியா' ஒட்டுண்ணிகள் ஆகிய இயற்கை எதிரிகள் தோப்புகளிலேயே இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். அவற்றைக் கொண்டும் வெள்ளை ஈக்களை அழிக்கலாம்.

ஒரு லீட்டர் தண்ணீரில் வேப்பெண்ணெய் 30 மில்லி எடுத்து ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்க வேண்டும்.

ஓலைகளில் படரும் கரும் பூஞ்சணத்தை நிவர்த்தி செய்ய 25 கிராம் கோதுமை மாவை (All purpose flour) ஒரு லீட்டர் தண்ணீரில் கலந்து, அல்லது அரிசிக்கஞ்சை ஓலைகளின் மேல் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும். இப்படி செய்யும் போது வெள்ளை ஈக்களால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கலாம் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் சில தமிழக இயற்கை விவசாய நண்பர்களுடனான கலந்துரையாடல்களில் கீழ் வரும் இயற்கை தீர்வுகளையும் பெற்றோம்.

தொடர்ந்து வறண்ட வெப்பநிலை நிலவுவதால் இந்த பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் கீழ்வரும் நஞ்சற்ற முறைகளைக் கடைபிடித்து வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

- **விளக்குப் பொறிகள் ஏக்கருக்கு 2 வீதம் 6 முதல் 11 மணி வரையிலும் ஒளிரசெய்ய வேண்டும்.**
- **வேப்பங்கொட்டைச் சாறு 5% , வேப்பெண்ணெய் 5 மில்லி தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.**
- **நொச்சி இலைச்சாறு (50 கிராம்/ லீட்டர்)**
- **நித்திய கல்யாணி எனப்படும் பட்டிப்பூ இலைச் சாறு (50 கிராம் லிட்டர்)**

கடைசி முயற்சியாக வேர்ட்டிசீலியம் லக்கானி உயிர் உரம் ஒரு லீட்டர் நீருக்கு 30 மில்லி எனும் அளவில் கலந்து 14 நாட்கள் இடைவெளியில் தென்னோலைகளில் நன்கு விசிற இந்த நோய்த் தாக்கம் கட்டுக்குள் வரும்.

**மேலதிக விபரங்கள்**
***CSJ Agri***
***009476 225 0017***

## இலங்கையில்... தொடர்ச்சி ...

வகையிலும் கடல் எல்லையை கண்காணிப்பது தொடர்பிலும் இதன்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. புலனாய்வுத் தகவல்கள் மற்றும் உளவு செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்த அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் இந்த ஜெட் ரக விமானம் பல நவீன தொழில்நுட்ப சாதனங் களுடன் 40,000 அடிக்கும் அதிகமான உயரத்தில் பறக்கும் திறன் கொண்டதாகும். 14 மணி நேரம் தொடர்ந்து பறக்கக்கூடிய ஆற்றலை இந்த விமானம் கொண்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடம் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இலங்கை விமானப்படைக்கு சுமார் 22 மில்லியன் டொலர் பெறுமதியான நவீன Beechcraft 360 ER ரக விமானத்தை அமெரிக்க அரசாங்கம் வழங்கவுள்ளது. N7700 Bombardier என்பது Beechcraft 360 ER வகை விமானத்தின் நடவடிக்கை கட்டமைப்பிற்கு மிக நெருக்கமான விமானமாகும்.

இலங்கை விமானப்படையின் விமானிகள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் ஏனைய அதி காரிகளுக்கு அதன் செயற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக் கைகள் மற்றும் விமான நிலைமைகள் தொடர்பில் நடைமுறைப் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் இந்த பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையின் விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை விமானப்படையிடம் கடல் மற்றும் தரைவழி ஆக்கிரமிப்பிற்காக இரண்டு Beech King Air 200 விமானங்கள் உள்ளதுடன், இந்த புதிய Beechcraft 360ER விமானம் கிடைத்த பின்னர், நாட்டின் கடல் பாதுகாப்பு வலுப்பெறும். இந்த பயிற்சி தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் (Julie Chung) X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மனிதாபிமான உதவி, இடர் நிவாரணம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றினூடாக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும் பாதுகாப்பான இந்தோ பசுபிக் பிராந்தியத்திற்காக முன்நிற்பதாகவும் அவர் அதில் பதிவிட்டுள்ளார்.

## இலண்டன்... தொடர்ச்சி ...

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளிற்கு ஆதரவாக தனியாகவும் தம்மை நிறுவனமயப்படுத்தியும் அந்நாட்டு சட்ட வரம்புகளைக் கடைப்பிடித்து செயற்பட்டு வருகிறார்கள்.

அவர்களின் தாயக மக்கள் மீதான அக்கறையை எமது கட்சி என்றும் மதித்து செயற்பட்டுவந்துள்ளது. அவர்கள் பல மக்கள் நலத்திட்டங்களை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கும், இயற்கைப் பேரிடர்களின் போதும், பெருந்தொற்றுக்கு எமது மக்கள் முகம் கொடுத்த போதும் மற்றும் கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடு போன்ற செயற்திட்டங்களிலும் நேரடியாகவும் எமது கட்சி உறுப்பினர்களூடாகவும் பல வருடங்களாகச் செயற்பட்டு வருகிறார்கள். அதற்கு எமது மக்கள் சார்பாக நன்றியுடையவர்களாக உள்ளோம். எமது கட்சியின் கொள்கைகளை ஏற்று இணைந்து செயற்பட விரும்பும் புலம்பெயர் உறவுகளுடன் செயற்பட கட்சி ஆயத்தமாக உள்ளது.

கடந்த சில நாள்களிற்கு முன் ஐக்கிய இராச்சியதில் இலண்டன் நகரில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளை அமைக்கப்பட்டதாக சில பத்திரிகை மற்றும் இணையத்தளங்களிலும், வேறு சிலவற்றில் 'இலங்கை தமிழ் அரசுக் கட்சி போரம்' அமைக்கப்பட்டதாகவும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளைகளைஅமைப்பதற்கானஅனுமதிவழங்கும் அதிகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கே உண்டு. இலங்கைக்கு வெளியே எமது கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான எந்த அனுமதியும் இதுவரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் வழங்கப்படவில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ரஸ்யாவில்... தொடர்ச்சி ...

கட்சியின் தலைவர் விலடிஸ்லேவ் டவன்கோவ் மற்றும் லிபரல் டெமோகிரட்டிவ் கட்சியின் தலைவர் லியோனிட் சுலுற்ஸ்கி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

எனினும் ரஸ்யாவில் பொது மக்களிடம் எடுக்கப்பட்ட கரு த்துக்கணிப்புக்களில் பூட்டின் 82 விகித வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

நாங்கள் முன்நகரவேண்டும் என்றால் எமக்குள் ஒற்றுமை தேவை நாம் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது. இது நாம் எமது எதிர்காலத்திற்கு எடுத்துவைக்கும் அடி எனவே ஒவ்வொருவரும் இதனை வெறும் தேர்தலாக பார்க்காது ரஸ்யாவை அபிவிருத்தி செய்வது தொடர்பான உங்களின் ஆசைகள் மற்றும் நோக்கங்களாக பாருங்கள்.

உக்ரைன் போர் மற்றும் மேற்குலக நாடுகளின் தடைகள் என மிகவும் நெருக்கடியான காலத்தின் ஊடாக நாம் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்றால் ஒற்றுமையாக நாம் எமது பலத்தை காண்பிக்கவேண்டும் என கடந்த வியாழக்கிழமை(14) நாட்டுமக்களுக்கான தனது உரையில் பூட்டின் தெரிவித்துள்ளார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.